சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 03.12.2021 supeedsam.com supeedsam@gmail.com




# நாட்டை அதிர வைக்கும் எரிவாயு வெடிப்புகள்



## இதுவரை 131 சம்பவங்கள் பதிவு

(சிவா)

நாட்டில் இந்த வருடத்தின் புதன் கிழமை வரையான காலப்பகுதியில் 131 எரிவாயு கசிவினால் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எரிவாயு சிலிண்டர் தீப்பற்றுதல் மற்றும் வெடிப்பது குறித்து ஆராய்ந்து தீர்வுகளை கண்டறிவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைகழகத்தில் கூடி ஆராய்ந்த


02 ஆம் பக்கத்தில்...

## சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக இலங்கையை அழைக்க முடியாது

(கீதன்)

எந்தவிதத்திலும் உங்களால் இலங்கையை ஒரு சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக அழைக்க முடியாது. இந்நாடு சிங்களம் பேசும் பெரும்பான்மையோர் வசிக்கும் பிரதேசங்களையும் தமிழ் பேசும் பெரும்பான்மையர் வசிக்கும் பிரதேசங்களையும் உள்ளடக்கிய நாடு என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



## உடன் அறிவியுங்கள்

(நமது நிருபர்)

தற்போது நாடளாவிய ரீதியில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் குறித்து உடன் அறிவிக்குமாறு எரிவாயு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, தீர்வுகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 8 பேரடங்கிய

02 ஆம் பக்கத்தில்...

## ஒமிக்ரோன் நுழைந்திருக்கலாம்



கொரோனாவின் புதிய பிறழ்வான ஒமிக்ரோன் ஏற்கனவே நாட்டிற்குள் நுழைந்திருக்கலாம் என சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகமான வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஒமிக்ரோன் பிறழ்வை கண்டறியும் வசதிகள் இலங்கையில் உள்ளன

### சுகாதாரத் தரப்பு தெரிவிப்பு



(காந்தவன்)

ஓமிக்ரோன் பிறழ்வு பரவுதல் தொடர்பாக உரிய புரிதல் இலங்கையில் இருப்பதாகவும், சிலவேளை நாட்டுக்குள் வைரஸ் நுழைந்தால் மரபணு பரிசோதனையின் மூலம் அதனை அடையாளம் காண்பதற்கு ஆய்வுகூட வசதிகள் உள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியது.

ஓமிக்ரோன் வைரஸை தடுப்பதற்கு நாடு தயார் என்ற தலைப்பில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பின் போதே இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

02 ஆம் பக்கத்தில்...

## 1000 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கோரோனா

அநுராதபுரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

02 ஆம் பக்கத்தில்...

## யாழ். மாவட்ட கடற்கரையோரங்களில் 06 நாட்களில் கரையோதுங்கிய 06 மனித உடல்கள்



(ஜூட்)

யாழ்.மாவட்ட கடற்கரையோரங்களில் தொடர்ந்து மனித சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன.

பருத்தித்துறை சக்கோட்டை கடற்கரையிலும் , மருதங்கேணி

02 ஆம் பக்கத்தில்...

## தங்க வேட்டை ஆரம்பம்

இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கத்தைத் தோண்டி எடுக்க முயற்சித்ததாக இரண்டு பிரதான அமைச்சுகளின் செயலாளர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த

02 ஆம் பக்கத்தில்...

## அசாத் சாலிக்கு விடுதலை



மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி நேற்று கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக, சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டு மதக் குழுக்களுக்கு இடையில்

02 ஆம் பக்கத்தில்...







## அம்பாந்தோட்டை துறைமுகத்தை எந்த நேரத்திலும் கையகப்படுத்தலாம்

(காந்தவன்)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தை எந்த நேரத்திலும் ரத்து செய்து இலங்கை கையகப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் மற்றும்



கப்பற்துறை அமைச்சின் வரவு செலவினம் மீதான குழுநிலை விவாதத்தின்

02 ஆம் பக்கத்தில்...






# உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய மட்டக்களப்பு பிரபல உணவு விற்பனை நிறுவனம் சுகாதார அதிகாரிகளால் சுற்றிவளைப்பு

**(ரீ.எல்.ஜவ்பர்கான் )**

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி உணவு தயாரிப்பில் ஈடுபட்டு விற்பனை செய்த குற்றத்தின்கீழ் மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல சர்வதேச உணவு விற்பனை நிறுவனத்தின்மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களையும் மீட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகப் புகழ் பெற்ற கே.எப்.சீ நிறுவனத்தின் மட்டக்களப்பு கிளையை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் ஆகியோர் சுற்றி வளைத்தனர். கோட்டை முனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் உட்பட பொது சுகாதார பரிசோகர்கள் தாதிய மாணவர்கள் சுகாதாரத்துறை சார்ந்தோரும் பங்கு கொண்டனர்.

இதன்போது சுற்றுத்துண்டு இடாமல் பொதி செய்யப்பட்டு உணவு தயாரிப்பிற்கு பயன் படுத்திய உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டன.

குறித்த நிறுவனத்தின்மீது மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் சுகாதார அதிகாரிகள் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக புளியந்தீவு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.தீபகுமாரன் தெரிவித்தார்.

# அம்பாரை மாவட்டத்தில் ஒரு திட்மிடல் இன்றி ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டு இருக்கின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன்

**(எஸ்.சபேசன்)**

அம்பாரை மாவட்டத்தில் ஒரு திட்மிடல் இன்றி ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டு இருக்கின்றது இதனால் பலகிராமங்கள் கடலரிப்பினால் காவுகொள்ளப்படுகின்றது. இதுதான் இன்றை அழிவாக இருந்துகொண்டிருக்கின்றது அதாவது ஒலுவில் தொடக்கம் பொத்துவில் வரைக்கும் அதுபோன்று ஒலுவிலில் இருந்து மட்டக்களப்பு வரைக்கும் கடலரிப்பால் பாரிய பாதிப்புக்கள் இடம்பெறுக்கொண்டிருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்

அவர் மேலும் பேசுகையில் வரலாற்று சிறப்புமிக்க திருக்கோவில் சித்திரவேலாயுதம் சுவாமி ஆலயம் கடலினால் காவுகொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தியிருக்கின்றோம் அதுபோல பாண்டிருப்பில் சிறுவர் பூங்கா கடலரிப்பால் காவுகொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் தொடர்பாக துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

ஆம்பாரை மாவட்டத்தில் எங்களது சமூகம் வாழுகின்ற பிரதேசம் குடிநீர் இன்றிப் பாதிக்கப்பட்டு இருந்தன இன்று அதற்கான பணிகளை அமைச்சர் மேற்கொண்டு இருக்கின்றார் அதற்காக நன்றி தெரிவிக்கின்றேன்.

அம்பாரைமாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு அப்போதைய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.அன்றில் இருந்து 2016 ஆம் ஆண்டுவரை நீர்வழங்குதல் நடைபெற்று வந்தநிலையில் எங்களது தமிழ்ப்பிரதேசம் திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டு இருந்தது .இது தொடர்பாக சில அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து தெரியப்படுத்தி இருந்தோம் ஆனால் அன்று எதுவும் நடைபெறவில்லை தற்போதுதான் கட்டம் கட்டமாக வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது இதற்காக அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

நாவிதன்வெளி பிரதேசத்தில் %0 வீதமான தமிழர்களும் 30 வீதமான முஸ்லிங்களும் வாழுகின்றனர் இவ்வாறான இந்தப்பிரதேசத்தில் குடிநீர் வழங்குவதில் இனரீதியான பாகுபாடு காட்டப்பட்டது ஒருசில அரசியல்வாதிகள் சமூகம் சார்ந்து செயற்பட்டமையினால் இனங்களுக்கு இடையிலான முறுகல் நிலையினைத் தோற்றுவித்து இருக்கின்றது.

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை எந்த நேரத்திலும் கையகப்படுத்தலாம்

போது நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய துறைமுகத்தை விற்பனை செய்வதற்கு அனுமதி இல்லை என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு விற்கப்படவில்லை எனவும், 70 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அவ்வாறு கையகப்படுத்தும் சாத்தியம் இல்லை என துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆனாலும் துறைமுகத்தை அப்படியே பராமரிப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், பிரச்சினை ஏற்பட்டால் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார்.

# தங்க வேட்டை ஆரம்பம்

சம்பவம் இடம்பெற்ற இடமான முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சுதந்திரபுரம் பகுதியில் புதையலைத் தேடி அகழ்வு நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி .சரவணராஜா முன்னிலையில் இந்த அகழ்வு நடவடிக்கைகள் பொலிஸாரால் மாலை(02) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தங்கத்தை நீதிமன்றின் உத்தரவிற்கு அமையத் தோண்டி எடுப்பதற்கு முன்னதாக அமைச்சுகளின் செயலாளர்கள் இருவர் இரகசியமாகத் தோண்டி எடுக்க முயன்றுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை முல்லைத்தீவு நீதவானின் உத்தரவிற்கு அமைய கடந்த நவம்பர் 25ம் திகதி தோண்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், மாவீரர் தின நிகழ்வுகளினால் இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் (02) வரையில் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே ஏற்கனவே நீதிமன்றம் குறிப்பிட்ட திகதியான இன்றையதினம் மேற்படி அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த அகழ்வு பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பகுதியில் ஏற்கனவே இரண்டு குழிகள் தோண்டப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றதோடு குறித்த குழிகள் 05 அடிக்கு மேற்பட்ட ஆழம் கொண்ட குழிகளாகவும் காணப்படுவதோடு நீர் நிரம்பிய நிலையில் காணப்படுகின்றது.

முதற்கட்டமாகக் குழிகளில் உள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கை இன்றையதினம் முன்னெடுக்கப்பட்டதோடு, தொடர்ந்து இயந்திரங்களைக் கொண்டு அகழும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அகழ்வு நடவடிக்கை இடம்பெறும் இடத்தில் பொலிஸார் , விசேட அதிரடிப் படையினர் , இராணுவத்தினர், புலனாய்வாளர்கள், உள்ளிட்ட தரப்புகள் பிரசன்னமாகியிருந்த நிலையிலேயே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளர்கள் இருவர் இந்த தங்கத்தை முன்கூட்டியே தோண்டி எடுக்க முயற்சித்துள்ளனர்.

இதற்காகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வீட்டுக்கே சென்று உதவி கோரப்பட்ட போதிலும் அதற்கு அவர் இணங்க மறுத்துள்ளார்.

நீதிமன்றில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் 25ம் திகதிக்கு முன்னதாக இரகசியமாகத் தங்கத்தைத் தோண்டி எடுக்க உதவுமாறும் கோரியுள்ளனர்.எனினும் இந்தக் கோரிக்கையை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிராகரித்துள்ளார் என ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓமிக்ரோன் பிறழ்வை கண்டறியும் வசதிகள் இலங்கையில் உள்ளன

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் விஞ்ஞானம் மற்றும் மூலக்கூறு விஞ்ஞானக் கல்விப் பிரிவின் தலைவர் பேராசிரியர் நீலிக்கா மலவிகே, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எச்.எஸ்.முனசிங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிர் அணு உயிரியல் விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர, சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ஹேரத் ஆகியோர் கலந்துகொண்ட ஊடக சந்திப்பு ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவினால் நடத்தப்பட்டது.

இதுவரை இருந்த கொரோனா வைரஸ் பிறழ்வு 04ஐ விடவும் ஓமிக்ரோன் பிறழ்வு மிகவும் வேகமாக பரவக்கூடியதுடன், கொவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களுக்கும் இது மீண்டும் தொற்றக்கூடுமென்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் விஞ்ஞானம் மற்றும் மூலக்கூறு விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவர் பேராசிரியர் நீலிக்கா மலவிகே சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் ஓமிக்ரோன் பிறழ்வு பற்றி தெளிவான கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டிய நீலிக்கா மலவிகே அவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தி உயர்மட்டத்தில் இருக்குமாயின் மாறுபட்ட பிறழ்வுகளுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். உலகின் 24 நாடுகளில் இதுவரை ஓமிக்ரோன் பிறழ்வு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக உலக சுகாதார பிரிவு விசேட அவதானத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் பாரிய அர்ப்பணிப்பு மற்றும் தலையீடுகள் காரணமாக கொவிட் கட்டுப்படுத்தலில் உலகின் உயர் நிலைக்கு நாடு அடைந்திருப்பதாகவும், புதிய பிறழ்வை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியப்படுவதோடு, உரிய சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் கடமையாகும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எச்.எஸ்.முனசிங்க குறிப்பிட்டார்.

இதுவரை தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் உடனடியாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியதோடு, பூஸ்டர் தடுப்பூசியின் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதனால் ஓமிக்ரோன் வந்தாலும் அனாவசிய அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்ட கலாநிதி சந்திம ஜீவந்தர அவர்கள், பொதுமக்கள் உரிய சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம் என்றும் தெளிவுபடுத்தினார்.

நோய்க்கு பயப்படுவதற்குப் பதிலாக சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றி, நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

தற்போது அரசாங்கம் செயற்படுத்துகின்ற கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமானதாக உள்ளதோடு, பண்டிகை காலத்தில் பயணங்களை சுருக்கிக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் அவர்கள் குறிப்பிட்டார்.

# சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக இலங்கையை அழைக்க முடியாது

இந்தவார கேள்வி பதில் தொகுப்பினூடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சிங்கள நாடல்ல. சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடே இது. ஆனால் வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பான்மையானோர் தமிழ் பேசுபவர்கள். பிரித்தானியர் நிர்வாக நோக்கங்களுக்காக இந்நாட்டை 1833ம் ஆண்டில் ஒன்றாக்கிய பொழுது யாழ்ப்பாண இராச்சியம் ஒன்று வடக்கிலிருந்தது.

உங்களுக்குத் தெரியும் இறுதி கண்டிய மன்னன் தமிழனாக இருந்தது மட்டுமன்றி 1815ல் பிரித்தானியருடன் செய்த ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையொப்பம் இட்டிருந்தார். அதே போல கண்டிய சிங்களத் தலைவர்கள் சிலரும் அவ்வாறே செய்தனர். எந்தவிதத்திலும் உங்களால் இலங்கையை ஒரு சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக அழைக்க முடியாது.

இந்நாடு சிங்களம் பேசும் பெரும்பான்மையோர் வசிக்கும் பிரதேசங்களையும் தமிழ் பேசும் பெரும்பான்மையர் வசிக்கும் பிரதேசங்களையும் உள்ளடக்கிய நாடு. 3000 வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் வாழ்ந்த பூர்வீக வாசிகள் தமிழையே பேசினர். அப்பொழுது சிங்கள மொழி என்ற ஒரு மொழி பிறந்திருக்கவில்லை. ஆகையால் அப்பொழுது சிங்களவர்கள் இருந்திருக்கவில்லை.

சிங்கள மொழியானது தமிழையும் பாளியையும் கொண்ட ஒரு கலப்பு மொழியாகும். தமிழ் மொழி மூலமாக சில சமஸ்ஹிருத சொற்கள் சிங்கள மொழியைச் சென்றடைந்தன. சமீப காலத்தைய மொழிபெயர்ப்புகளுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் சிங்களப் பெயர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை.

ஆனால் பௌத்தத்தைச் சிங்கள மொழியுடன் இணைத்து எங்கெங்கெல்லாம் பௌத்த சின்னங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் சிங்கள மக்கள் பூர்வீகமாகக் குடியிருந்த இடங்கள் என ஏமாற்றி வருகின்றனர். இது முற்று முழுதான ஒரு தவறு.

ஆகவே ‘தமிழர் தாயகம்’ என்று பெரும்பான்மை தமிழர் வசிக்கும் இலங்கையின் வடக்கு கிழக்கை அழைப்பதில் எந்தப் பிழையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

# உடன் அறிவியுங்கள்

குழுவின் தலைவர் பேராசிரியர் சாந்த வல்பெலகே பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எரிவாயு வெடிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிக்க இவ்வாறு பொதுமக்களுக்கு 2 விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, 01158119277 மற்றும் 0115811929 ஆகிய தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு எரிவாயு தொடர்பான பிரச்சினைகளை அறிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அசாத் சாலிக்கு விடுதலை

பகைமையைத் தூண்டிய குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

எனினும் அசாத் சாலியை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவித்து, அவரை குற்றமற்றவராகக் கருதி விடுதலை செய்ய இன்று கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# யாழ். மாவட்ட கடற்கரையோரங்களில்

கிழக்கு சுண்டிக்குளம் கடற்கரையிலும் நேற்றைய தினம் இரு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. நேற்றைய தினம் கரையொதுங்கிய இரு சடலங்களுடன் , கடந்த 6 நாட்களுக்குள் 6 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

டந்த சனிக்கிழமை வடமராட்சி மணற்காடு மற்றும் வல்வெட்டித்துறை கடற்கரை பகுதிகளில் இரு சடலங்களும் , ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கடற்கரையில் ஒரு சடலமும், கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி கடற்கரை பகுதியில் ஒரு சடலமும் கரையொதுங்கி இருந்தன. கரையொதுங்கிய ஆறு சடலங்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் தெரியாத நிலையில் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன. சம்பவங்கள் தொடர்பில் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓமிக்ரோன் நுழைந்திருக்கலாம்

மேலும் மரபணு வரிசைமுறைக்கு உட்பட்டாலன்றி மாறுபாட்டையுடைய தொற்றாளர்களை அடையாளம் காண முடியாது.

இந்த பிறழ்வை உடனடியாக அடையாளம் காண முடியாது என்றும், சோதனை விலை அதிகம் என்றும், இது நேரத்தை எடுத்துக் கொள்ளும் செயலாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, அதிக ஆபத்துள்ள குழுக்கள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் பிசிஆர் மாதிரிகள் மரபணுபரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றன.

அனைத்து பொது நடவடிக்கைகளும் விமான நிலையங்களுக்குள் அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 1000 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கொரோன

அநுராதபுரம் கொரோனா சிவப்பு வலயமாக மாறியுள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கொரோனா நோயாளிகளாக மாறியுள்ளனர்.

அத்துடன் அனுராதபுரம் நகரம் மற்றும் கிராமப்புறங்களில் ஏனைய நாட்களை விட தற்போது அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக நேற்றைய தினம் மாத்திரம் அனுராதபுரம் நகரில் நான்கு பேர் உயிரிழந்தனர் எனவும் ரோஹன பண்டார குறிப்பிட்டுள்ளார்.

நீர்பாசன அமைச்சர் சமல் ராஜபக்சவிடம் கேள்வி ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே ரோஹன பண்டார இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார். அனுராதபுரத்தல் கொரோனா பரிசோதனைகள் நடத்தப்படுவது குறைக்கப்பட்டுள்ளதால், பரிசோதனைகளை அதிகரிக்குமாறு கோருகிறேன். தடுப்பூசிகளுக்கு மாத்திரம் வரையறுத்து பணியாற்ற வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் எனவும் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள அமைச்சர் சமல் ராஜபக்ச, இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

# நாட்டை அதிர வைக்கும் எரிவாயு வெடிப்புகள்

போதே குறித்த குழு இந்த விடயங்களை தெரிவித்துள்ளது.

இதில், எரிவாயு சிலிண்டருக்கு சிறு சேதம் - 05, எரிவாயு விநியோக குழாய் சேதம் - 09, ரெகுலேட்டருக்கு சேதம் 10, எரிவாயு அடுப்பு வெடிப்பு 56, வாயு கசிவுகள் - 47, அதிக வெப்பத்தால் ஏற்படும் விபத்துகள் - 04 என பதிவாகியுள்ளன.

தற்போது அவதானிக்கப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில் ஆபத்துக்களை தவிர்க்க அவசர நடவடிக்கை எடுக்கப்படுவதன் ஒரு அங்கமாக, பொதுமக்களுக்கு பின்வரும் பாதுகாப்பு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

# எரிவாயு வெடிப்பை தடுக்க முடியாத அரசால் பொருளாதார முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்



நாட்டின் சமையல் எரிவாயு சிலிண்டர் அடுப்புகள் நாலா திசையும் வெடிக்கின்றன. இதற்கு என்ன காரணம் எப்படி தடுப்பது என்பதற்கு இதுவரை தீர்வுகள் இல்லை. இதனைதடுக்க முடியாத அரசிடம் பொருளாதார முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என மட்டு.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் கேள்வியெழுப்பினார்.

எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புத் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடந்த இரு வாரங்களில் சமையல் எரிவாயு கசிவினால் 17 வெடிப்பு சம்பவங்களும் கடந்த மூன்று நாட்களில் 5 வெடிப்புகளும் பதிவாகியுள்ளன.

தற்போது ஜனாதிபதியால் இதனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் அதன் அறிக்கையை தரும்படி பணிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை இரண்டு வாரங்களுக்கு தயாரிக்கும் வரை சமையல் எரிவாயு சிலின்டர்கள் வெடித்தால் யார் பொறுப்பு. உண்மையில் உடனடியாக பொதுமக்களுக்கு தற்காலிக எரிவாயு சிலின்டர் அடுப்புகளை பாவிக்க வேண்டாம் என்று ஆலோசனை கூறக்கூட அரசால் முடியவில்லை. மக்கள் எப்படி கஷ்டப்பட்டாலும் மன்னர்கள் சொகுசாக வாழ்ந்தால் போதும் என்ற நிலையே எரிவாயு சிலின்டர் வெடிப்பு சம்பவங்களிலிருந்து அரசாட்சியாளர்களிடமிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

பொருளாதாரத்திலும் விலையேற்றம், சாதாரண அன்றாட கூலி வேலை செய்யும் குடும்பங்களின் வயிற்றில் நெருப்பை ஏற்றிவிட்டு எரிவாயு அடுப்பிலும் நெருப்பை வைக்கும் நிலையிலையே நாடு இப்போது சென்று கொண்டிருக்கிறது. நாட்டில் இவ்வாறு பல இடங்களில் எரிவாயு வெடித்தால் முதலில் செய்ய வேண்டியது அந்த எரிவாயு பாவனைகளை உடனே நிறுத்துவதற்கான முயற்சிகளை கூற வேண்டும். அதுதான் ஆரோக்கிய அரசின் கடமை. ஆனால் மக்களுக்கு இதுவரை இதையிட்டு ஒன்றுமே கூறாமல் அதனை ஆராயக்குழு அமைத்துள்ளமை, அந்த குழுக்கூடி ஆராயும் வரை மக்கள் செத்தாலும் பரவாயில்லை என்ற எண்ணமே இந்த அரசின் செயற்பாட்டிலிருந்து உணரக்கூடியதாகவுள்ளது.

நாட்டில் வழமைக்கு மாறாக சமையல் எரிவாயு சிலிண்டர்களை அண்மித்த வெடிப்பு சம்பவங்கள் பதிவாகின்றமையை ஏற்றுக்கொள்வதைப் போலவே, இவ்விடயம் தொடர்பான பொறுப்புக்கூறலிலிருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகாது என்று அமைச்சரவை பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சர் பொறுப்புக் கூறுவதையே தெரிவிக்கிறார். மக்களை எப்படி அதில் இருந்து காப்பாற்றுவது என்பதை கூறவில்லை. இதில் இருந்து, மக்கள்மீது அக்கறை இல்லாத அரசு என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

மக்களின் உயிருக்கும் உணவுக்கும் அக்கறை செலுத்தாத இந்த அரசால் எப்படி மற்ற விடயங்களை எதிர்பார்க்க முடியும் எனவும் மேலும் கூறினார்.

# கந்தளாய் அக்போபுர பகுதியில் கேஸ் அடுப்பு வெடிப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கேஷ் அடுப்பு வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று (2) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர யூனிட் 19 ஆவது குலனி பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் உயிர் சேதம் எதுவும் இடம்பெறவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக பாவனையில் இல்லாத கேஷ் அடுப்பே இவ்வாறு வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறையில் கேஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம் பதிவானது

(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)



சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வளத்தாப்பிட்டி 1 கிராம சேவையாளர் பகுதியில் நேற்று (2)காலை எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

நேற்று காலை 10 மணியளவில் தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பினை செயல்படுத்திய போது குறித்தவெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

எரிவாயு அடுப்பினை செயற்படுத்தி விட்டு வெளியில் வந்து வேறு வேலை செய்து கொண்டிருந்த வேளைஅவர்களது சமையலறையில் வெடிப்புச் சம்பவம் ஒன்று ஏற்பட்டதை உணர்ந்து அங்கு போய்பார்வையிட்டபோது குறித்த எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளதாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த எரிவாயு வெடிப்பு சம்பவத்தின் போது எதுவித உயிராபத்துக்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த வெடிப்பு சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை பொலிசாருக்கும் கிராமசேவகர் அலுவலருக்கும்அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுநர் இலங்கைக்கான ஜேர்மன் உயரிஸ்தானிகர் சந்திப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் உயரிஸ்தானிகர் (HOLGER SEUVERT) ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (02) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

ஜேர்மன் அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் விவசாயத் துறை தொடர்பான அபிவிருத்திக்கு தங்களால் முடியுமான பூரண ஒத்துழைப்பை வழங்க உள்ளதாக உயரிஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார்.

குறிப்பாக ஜேர்மன் உயர்ஸ்தானிகர் உடன் ஜெர்மன் வர்த்தக சங்க தலைவரும் இதில் கலந்து கொண்டதுடன் சுமார் 250க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், அதன் மூலம் பிராந்திய அபிவிருத்தி உட்பட ஏற்றுமதி வாய்ப்புகளும் ஐரோப்பிய சந்தைக்கு மேற்கொள்ள ஏதுவாக அமையும் என ஜேர்மன் உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

ரம்மியமான பிரதேசமாக கிழக்கு மாகாணம் காணப்படுவதாகவும், முதலீட்டுக்கு ஏற்ற நிலவரம் இந்த மாகாணத்தில் காணப்படுவது முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.


முதலீட்டு வாய்ப்புகள் மூலம் இலங்கையினுடைய பொருளாதாரத்துக்கு வலு சேர்க்க முடிவதோடு ஏற்றுமதி அபிவிருத்தியும் ஏற்படக்கூடிய நிலவரம் ஏற்படும் எனவும் ஜேர்மன் உயரிஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாண ஆளுநர் கருத்து தெரிவிக்கையில் கிழக்கு மாகாணம் சுற்றுலா மற்றும் விவசாய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை கொண்டுள்ளதாகவும் குறித்த துறைகளில் முதலீடு செய்வதற்கு ஜெர்மன் தயாராக இருப்பதாக இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

ஜெர்மன் உயரஸ்தானிகர் நினைவுப்பரிசில் ஒன்றை கிழக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கியதுடன் கிழக்கு மாகாண ஆளுநரும் ஜெர்மன் உயர்ஸ்த்தானிகரிற்கு இதன்போது நினைவுப்பரிசிலை வழங்கியமை குறிப்பிடத்தக்கது .

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ வணிகசிங்க, ஆளுநர் செயலாளர் எல்.பீ.மதனாயக்க உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பட்டிப்போலவில் வீடொன்றில் கேஸ் அடுப்பு வெடிப்பு



(க.கிஷாந்தன்)

நுவரெலியா பட்டிப்பொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று (02) மதியம் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குடியிருப்பாளர்கள் கேஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்த போது, திடீரென கேஸ் அடுப்பு வெடித்ததால், கேஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் பட்டிப்பொல பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பிரதேச சபை ஊழியர்களின் கவன ஈர்ப்பு போராட்டம் மிகவும் நியாயமானது; தவிசாளர் ரஜனி





(ரக்ஸனா)

எமது பிரதேசசபையில் அமைய அடிப்படையில் கடமை புரிகின்ற ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற கவன ஈர்ப்பு போராட்டம் மிகவும் நியாயமானதாகும். அவர்களில் சுமார் 8 வருடங்களாக கடமையாற்றுகின்றவர்களுக்குக்கூட இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. கடந்த 2014 ஆம் ஆண்டு இதே அரசாங்கத்திலுள்ள பிரமதமர் அப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக நியமனங்கள்கூட இன்னும் நிரந்தரமாகக்கப்படவில்லை. என போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் யோ.ராஜனி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபையில் அமைய அடிப்படையில் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் தமக்குரிய நிரந்தர நியமனம் வழங்குமாறு தெரிவித்து புதன்கிழமை(01) பிரதேச சபையின் முன்னால் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை ஊழியர்கள் பிரதேசசபைத் தவிசாளர் யோ. ரஜனியிடம் வழங்கினர். மகஜரைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில் இந்த தொழிலாளர்களை அரசாங்கம் மிக விரைவில் நிரந்தரமாக்குவதற்கு முன்வர வேண்டும். 180 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட எமது போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் மக்களுக்குரிய சேவையை நாம் வழங்குவதற்கு அமைய அடிப்படையில் இதுவரையில் கடமையாற்றி வருகின்ற சுகாதார தொழிலாளர்கள், நூலக உதவியாளர்கள், உள்ளிட்ட, ஊழியர்களின் நிரந்தர நியமனம் என்பது காலத்தின் கட்டாயமாக்கப்பட வேண்டியதாகும். கொரோனா காலத்திலும்கூட ஏனைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த போதும் எமது இந்த ஊழியர்கள் தமது உயிரை துச்சமென நினைத்து மிகவும் பொறுப்புணர்வுடன் கடமையாற்றினார்கள். அரசாங்கம் ஒரு லெட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்திலாவது தொழில்கள் பயிற்றப்பட்ட இந்த ஊழிகயர்களுக்கு நியமனம் வழங்கியிருக்கலாம். எனினும் வரவு செலவுத்திட்டத்தின் பின்னராவது இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

எமது பிரதேசசபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தில் மூன்று ஆளுனர்கள் மாறி மாறி வந்துள்ளார்கள். அவர்கள் அனைவரிடமும் எமது சபையில் 38 பேர் அமைய அடிப்படையிலும், 18 பேர் பதிலீட்டு அடிப்படையிலும் கடமையாற்றுகின்றவர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் எடுத்துரைத்தோம். இன்னும் அது தொடர்பில் எதுவித முன்னேற்றமும் இடம்பெறவில்லை. என அவர் இதன்போத தெரிவித்தார்.

# கோக்கட்டிச்சோலையில் ஆர்ப்பாட்டம்





(படுவான் பாலகன்)

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் 6வருடங்களுக்கு மேலாக தற்காலிக, அமைய, பதிலீட்டு அடிப்படையில் கடமைபுரியும் ஊழியர்கள் கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ள மண்முனை தென்மேற்கு பிரதேசசபை அலுவலகத்திற்கு முன்னால் புதன்கிழமை (01) தமக்கு நிரந்தர நியமனத்தினை வழங்குமாறு கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஊழியர்கள், நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு கிழக்கு மாகாண ஆளுனர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் முன்வர வேண்டுமென தெரிவித்ததுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, நிரந்தர நியமனத்தினை பெற்றுத்தருமாறு கோரிய மகஜரினை, மண்முனை தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் சி.புஸ்பலிங்கத்திடம் கையளித்தனர்.




வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44
மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

# மட்டக்களப்பில் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிலையம் திறந்து வைப்பு






**(ந.குகதர்சன்)**

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்காக தொழிற்பயிற்சி நிலையம் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகணத்திற்கான முதல் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுதர்சினி பெனார்ந்தோ புள்ளே தலைமையில் நேற்று (02) மட்டக்களப்பு வாழைச்சேனையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நான்கரை ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 125 மில்லியன் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தில் நவீன வசதிகள் கொண்ட வகுப்பறைகள், நிருவாகக் கட்டிடம், கேட்போர் கூடம், ஆண், பெண் இருபாலாருக்குமான தங்குமிட விடுதிகள், விளையாட்டு மைதானம், சமயலறைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் உள்ளடங்கியுள்ளன. இந்தொழில் பயிற்சி நிலையத்தில் தையல் ஆடை உற்பத்தி மற்றும் மின் பாவனைப் பொருள் திருத்துதல் போன்ற பயிற்சிகள் முதல் கட்டமாக இன்று இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெனார்ந்தோ புள்ளேவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக 40 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கி கற்பதற்கான ஏற்பாடுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நிலையத்தில் இரண்டு வருடங்களைக் கொண்ட இப்பயிற்சி நெறியினைத் தொடரும் 18 வயதுக்கும் 35 வயதிற்குமிடைப்பட்ட வலதுகுறைந்த மாணவர்களுக்கு இலவச கல்வி, தங்குமிட வசதி உட்பட பயிற்சிக் காலம் வரைக்கும் நாளொன்றுக்கு 150 ரூபா கொடுப்பணவும் வழங்கப்படவுள்ளது.

பயிற்சிநெறி நிறைவில் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் 6 மாதகால பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன் கற்றுக் கொண்ட தொழிலை மேற்கொள்வதற்கான உபகரணத் தொகுதியும் இலவசமாக வழங்கி வைக்கப்படவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெனார்ந்தோபுள்ளேவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்ட இத்தொழில் பயிற்சி நிலையம் நாட்டின் 9ஆவது பயிற்சி நிலையமாகவும் கிழக்கு மாகாணத்திற்குரியதுமாக அமைக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. சுனேத்ரா குணவர்தன, மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், சமூக சேவை திணைக்களப் பணிப்பாளர் சந்தன ரணவீர ஆராச்சி, சிறுவர் நிதியத்தின் முகாமையாளர் நாளக ஸ்ரீவர்தன, பிரதேச செயலாளர்கள், உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிதிகளால் பயன்தரு மாமரக் கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாணக்கியனினால் அரசடித்தீவு சக்தி மகளிர் இல்லத்திற்கு தளபாடங்கள் வழங்கிவைக்கப்பட்டன!




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அரசடித்தீவு சக்தி மகளிர் இல்லத்திற்கு தளபாடங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவை வழங்கி வைக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் உத்தியோகபூர்வ செயலாளரும், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளருமான மதிமேனனினால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இலங்கை தமிழரசு கட்சி கிளையின் பட்டிரிப்புத் தொகுதியின் தலைவர் பா. அரியநேந்திரன், பட்டிருப்பு தொகுதியின் பொருளாளர் நடராஜா, பட்டிப்பளை தமிழரசுக் கட்சி கிளையின் தலைவர் நேசதுரை மற்றும் மண்முனை தென் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் புஸ்பலிங்கம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

# இன மத மோழிவாதம் குறுகிய இலாப நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படுகிறது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்.

**(இ.சுதாகரன்)**



இலங்கையில், இன மத மொழிவாதம் குறுகிய அரசியல் இலாப நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படுகிறது, இதனால் இன வன்முறை முரண்பாடு, பகை மோதல் இற்றைவரை ஏற்பட்டு வருகிறது. இதன் உச்சமாகவே 30 ஆண்டுகள் இனப்போர் இடம்பெற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

நாடும் மக்களும் தோல்வியடைந்தாலும் இன, மதவாதிகள் தேர்தலில் வெற்றியடைகின்றனர். தமது அரசியல் வியாபாரத்தில் இலாபமும் அடைகின்றனர். தற்போது அரசியல் இலாபத்திற்காக சமூகத்தைப் பிரித்து அரசியல் இலாபங்கள் அடைவதற்காக, தேர்தல்களில் வெற்றிகள் பெறுவதற்காக பராய நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இளைஞர், முதியோர் என்ற பாகுபாடுகளை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

இளைஞர்கள் அரசியலில் ஈடுபட வேண்டியது அவசியம். ஆனால் இளைஞர்கள் கட்சி தடுமாறுகின்றவர்களாகவோ சுயநலத்திற்காக அரசின் காவலர்கள் தவறான பாதைகளுக்கு இழுத்துச் செல்கின்றவர்களாகவோ இருக்கக்கூடாது.

கடந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு தம்மை இளைஞர்கள் என்று விலாசப்படுத்திய பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி உறுப்பினர்கள் பதவி வெறி பண மோகத்தால் கட்சி தாவிச் சென்றுள்ளார்கள். மாற்றுக் கட்சிகளில் போட்டியிட்டு மக்களால் படிப்பினை பெற்றவர்களும் கூட்டமைப்பில் இணைந்தும் உள்ளனர். புதியவர்கள் மட்டுமல்ல கடந்த காலத்தில் முதியவர்கள் சிலரும் கட்சி தாவிச்சென்றுள்ளனர்.

யாராக இருந்தாலும் கொள்கைப் பற்று, தளம்பல் நிலையின்மை, குறுகிய மனப்பாங்கு இன்மை, கட்சியைச் சிதைக்காத தன்மை, ஊழல் மோசடி அற்ற தன்மை, ஒற்றர்தன்மை அற்றவர்கள், அர்ப்பணிப்பானவர்கள், ஒழுக்கமானவர்கள், உளறுவாயற்ற நாக்காவலர்கள் தமிழ் தேசியப் பரப்பில் பணிகளாற்றத் தகுதி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

குறுகிய அரசியல் தேவைக்காக குறுகிய வாதங்களைத் தேர்தல்களின்போது கட்சிக்குள் இருந்துகொண்டே இடத்திற்கேற்றவாறு விதைத்து வாக்குகளை அறுவடை செய்கின்றவர்கள் கட்சியின் வளர்ச்சிக்கு எதிர்மறையானவர்கள். கட்சிக்குள்ளே இருந்து கொண்டு வார்த்தைகள், நடைமுறைகளால் கட்சியைப் பலவீனப்படுத்துகின்றவர்களை ஆழமாக அவதானித்து அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

மேலும் பேதை, போதை நாட்டம் உள்ளவர்களும் கட்சிகளின் நன்மதிப்பைச் சிதைத்து விடுவார்கள். இன்னும் சிலர் தமது வெற்றிக்காக மட்டும் வித்தியாசமான பாணியில் செயல்பட்டு, கட்சியின் வெற்றியைப் பின் நோக்கித் தள்ளிவிட்டு தனிப்பட்ட செல்வாக்கில் வென்றதாக இறுமாப்பில் பேசுவதும் உண்டு, அவ்வாறு பேசுபவர்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு நிரூபித்துக் காட்ட வேண்டும்.

கட்சி தோற்றுவிட்டது நான் வென்றுவிட்டேன் என்பது தன்னடக்கம் இல்லாத தமது வெற்றிக்காக உழைத்து வெற்றியடையாதவர்களையும் கட்சியையும் சிறுமைப்படுத்துகின்ற பக்குவப் பண்பற்றதாகவே அமையும். பிரதேசத்திற்கோர்வாதம் சாகியத்திற்கோர்வாதம் பராயத்திற்கோர்வாதம் போதையிலோர்வாதம் குறைந்த வயதில் ஒரு வாதம் கூடிய வயதில் மறுவாதம் என்பதெல்லாம் அடிப்படையற்ற அரசியல் பிழைப்புவாதமாகவே அமையும், அர்த்தமான வாதங்களாக அமையாது. குறுகிய காலத்தில் எல்லாம் வெளுத்துவிடும் என்றார்

# காத்தான்குடி நகர சபை பசுமை நகர் பெருந் திட்டத் தயாரிப்பின் இறுதிக் கலந்துரையாடல்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

காத்தான்குடி நகர சபை பசுமை நகர் **Green city** பெருந் திட்டத்தயாரிப்பின் இறுதிக் கலந்துரையாடலொன்று (30.11.2021) செவ்வாய்க்கிழமை காத்தான்குடியில் உள்ள தனியார் விடுதி மண்டபத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களமும் ஐக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் இணைந்து செயற்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை கட்டியெழுப்பும், செயற்திட்டமானது இலங்கையில் உள்ளராட்சி முறையை வலுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் உலக வங்கி உள்ளிட்ட அபிவிருத்தி பங்காளர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படும் பாரிய நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் ஒரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை வலுப்படுத்துகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட தெரிவுப் போட்டியில் காத்தான்குடி நகர சபையானது பசுமை நகர் (Green city) செயற் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக கடந்த 23.02.2021 அன்று நடைபெற்ற பெருந்திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடலைத் தொடர்ந்து காத்தான்குடிக்காக பசுமை நகர் (Green city) பெருந் திட்டம் தொடர்பான இறுதி வரைபு கிடைக்கப் பெற்றதையடுத்து இது தொடர்பாக இறுதியாக ஆராயும் வகையில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர், உள்ளூராட்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் டி.பிரகாஸ் உட்பட காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள், நகரசபை செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக பிரதி நிதிகள் சுகாதார அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உலக நீரிழிவு தினப்போட்டியில் காரைதீவு மாணவி டிசானிக்கா சாதனை

**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

உலக நீரிழிவுதினத்தையொட்டி இலங்கை அகஞ்சுரக்கும்தொகுதி நிபுணர்கள் கல்லூரியும்(SriLnaka College of Endocrinologists), இலங்கை நீரிழிவு சம்மேளனமும்(SriLanka Diabetic Association) இணைந்து நடாத்திய தமிழ்மொழிமூல சிரேஸ்ட மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் காரைதீவு மாணவி பிரபாகரன் டிசானிகா மூன்றாமிடத்தை சுவீகரித்துள்ளார்.

மேற்படி அமைப்புகள் அகில இலங்கை ரீதியில் தமிழ் சிங்கள ஆங்கில மொழிமூலம் நடாத்திய சித்திரம் கட்டுரை மற்றும் பல்லூடக போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா இலங்கை மருத்துவ சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.



அங்கு சிரேஸ்ட மாணவர்களுக்கானதமிழ்மொழிமூல கட்டுரைப்போட்டியில் கிழக்கு மாகாணத்திலிருந்து பங்குபற்றித்தெரிவான ஒரேயொரு மாணவியான காரைதீவு மாணவி பிரபாகரன் டிசானிகாவிற்கான பரிசும் வழங்கப்பட்டது.

இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர்கள் கல்லூரியின்தலைவர் வைத்தியகலாநிதி டாக்டர் சாமிந்த கருசிங்க தலைமையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் மாணவி டிசானிக்காவிற்கு பத்தாயிரம்ருபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

# திருமலை தென்னமரவாடி பகுதியில் குளவி கோட்டுக்கு இலக்கான நபரோருவர் உயிரிழப்பு.

**(எப்.முபாரக்)**

திருகோணமலை தென்னமரவாடி பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்கான நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று (02) காலை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த கனகசபை குகநாதன் (69வயது) எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டிலிருந்து மாடு பார்ப்பதற்காக சென்ற போது மரத்திலிருந்து குளவி கூடு கலைந்து குறித்த நபரை குத்தியதாகவும் இதனை அடுத்து புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த நபரின் சடலம் தற்போது புல்மோட்டை தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் புல்மோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# உலகின் அரிதான நாகலிங்க மரம் மடத்தடியில் நட்டுவைப்பு!



இலங்கையிலுள்ள ஒரேயொரு மீனாட்சிஅம்மன் ஆலயமான வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்தவருடம் (2022) மார்ச் மாதமளவில் நடைபெறும்.

அதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ்க்கிராமங்களிலுமுள்ள மீனாட்சிஅம்மன் அடியார்கள் சுதந்திரமாக கலந்துகொள்ள முடியும் எனவும்இ அன்றையதினம் அவர்களிலிருந்து மகா கும்பாபிசேகக்குழு உள்ளிட்ட பல உபகுழுக்களும் தெரிவுசெய்யப்படுமென ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் அங்கு பகிரங்கமாக அழைப்புவிடுத்து அறிவித்தல் விடுத்தார்.

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் புதிய ஆலயத்தின் மகா கும்பாபிசேகத் தடியொட்டிய முகப்புக் கோபரத்திற்கான அடிக்கல் நடும்வைபவம் வெள்ளியன்று நடைபெற்றது.

இதேவேளை உலகில் அரிதாக கிடைக்கின்ற நாகலிங்க மரத்தின் கன்று வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் புதிய ஆலயத்தில் வெள்ளியன்று நட்டுவைக்கப்பட்டது.



ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற மரம்நடும்டிவைபவத்தில் ஆலயஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட நிருவாகசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் வழி;காட்டலில் ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இவ் அரிதாக மரத்தை நட்டுவைத்தார்.

நாகலிங்கமரத்தின் மகிமை பற்றி ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அங்கு தெரிவிக்கையில்:

நாகலிங்கம் தென்னமெரிக்காவின் வடபகுதி வெப்பவலய அமெரிக்கா தென் கரிபியன் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டது.

இது 3035 மீட்ட உயரம் வரை வளரக்கூடியது.இலங்கையின் சில பகுதிகளிலும் நாகலிங்க மரங்கள் காணப்படுகின்றன. சிங்கள மொழியில் இது சல் (வீலீழ) என அழைக்கப்படுகிறது. இம்மரத்தின் பழம் முற்றி பழுக்க 1 வருடம் முதல் 18 மாதம் வரை கூட ஆகலாம்.

இம்மரத்தின் இலை மற்றும் பழங்களிலுள்ள டைஹைட்ரோடையாக்சின்டோலோ குயினாசோலோன் டிரிப்டான்ரின் இன்டிகோ இன்டுருபின் ஐசாடின் ஆகியன எதிர் உயிரியாக செயல்பட்டு தோல் உடலின் மென்மையான பகுதிகளில் வளரும் பூஞ்சை பாக்டீரியா கிருமிகளை அழிக்கின்றன.

இதன் பட்டை மலேரியா சுரத்தை நீக்க பயன்படுத்தப்படுகிறது. இதன் உலர்ந்த பழங்கள் கீழே விழுந்து தரையில் பட்டு வெடித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தும். ஆகவே கோயில்களில் கொள்ளையர்கள் புகாமல் இருக்க பாதுகாப்பின் அடையாளமாக நாகலிங்க மரங்கள் கோயில்களில் வளர்க்கப்படுகின்றன.



இதன் இலைகளை மையாக அரைத்து பூஞ்சை கிருமியால் தோன்றும் சொறி சிரங்கு படர் தாமரை படை உள்ள இடங்களில் தடவ குணமுண்டாகும். இதன் பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்து புண்களின் மேல் தடவ புண்கள் ஆறும்.

இதன் இலைகள் நுண்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டதால் இவற்றை மென்று சாப்பிட பல் மற்றும் ஈறு இடைவெளியில் தங்கியுள்ள கிருமிகளை வெளியேற்றி பல்வலியை குறைக்கின்றன. பற்கள் சொத்தையாகாமல் தடுக்கின்றன.என்றார்.

ஜனாதிபதியின் 1லட்சம் கிலோமீற்றர் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ்இ வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதி கொங்கிறீட் வீதியாக புனர்நிருமாணம் செய்யப்படவிருக்கின்றது.

நீண்டகாலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோய் போக்குவரத்திற்கு பொருத்தமில்லாததாக இருந்தது. அவ் வீதியை பிரதமரின் 1லட்சம் கிலோமீற்றர் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் புனரமைக்க ஏற்பாடாகியுள்ளது.

அதற்கான அளவை மதிப்பீட்டுவேலைகள் அங்கு ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் முன்னிலையில் நடைபெற்றது. வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் கல்முனைப்பிராந்திய சிரேஸ்ட தொழினுட்பஉத்தியோகத்தர் ஏ.எம்.ஜௌபர் மதிப்பீட்டுவேலைகளை மேற்கொண்டார்.

நாவிதன்வெளி பிரதேசசபை உறுப்பினர் ரி.யோகநாயகன் திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.அரியநாயகம் ஆகியோர் மேற்கொண்ட திவீர முயற்சியின் காரணமாக சுமார் ஒன்றரை கிலோமீற்றர் வீதி ஆலயத்திற்காக கொங்கிறீட் வீதியாக போடப்படவிருக்கின்றது.

மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்தவருடம் 2022 மார்ச் மாதமளவில் நடைபெறும்.அதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)





# பெருவெளிக் கண்டத்தில் இடைப்போகக் கன்னி முயற்சி வெற்றி

(சுமன்)

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெருவெளிக்கண்டத்தில் வரலாற்றில் முதற் தடவையாக மேற்கொள்ளப்பட்ட 170 ஏக்கர் இடைப்போகச்செய்கை அக்கண்ட விவசாயிகளுக்கு அமோக விளைச்சலைத் தந்துள்ளதாகப் பெருவெளிக் கண்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.





இது தொடர்பில் பெருவெளிக் கண்டத்தின் தலைவர் க.சித்திரவேல், செயலாளர் ச.சந்திரமோகன் ஆகியோர் தெரிவிக்கையில், மேற்படி பெருவெளிக்கண்டத்தில் வரலாற்றில் முதற் தடவையாக சுமார் 170 ஏக்கர் இடைப்போகச் செய்கைக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் விஸ்ணுரூபன் அவர்களிடம் விவசாயிகள் சார்பில் அனுமதி கோரியிருந்தோம். விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக எமக்கான அனுமதியினைத் தந்து எம்மால் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளின் நிலைமைகள் தொடர்பில் தனது விசேட கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளைப் பெறியிலாளர் வழங்கியிருந்தார். அவரின் அவ்வாறான ஒத்துழைப்புகளின் மூலம் இன்று சராசரியாக ஏக்கர் ஒன்றிற்கு 25 மூடை நெல்லினை விளைவிக்கக் கூடியதாக இருந்தது.

இது வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்த செயற்பாடாகும். எமது கன்னி முயற்சிக்கு இத்தகைய பலன் கிடைத்துள்ளது. இதற்குக் காரணமான இருந்த எங்கள் மதிப்பிற்குரிய பொறியியலாளர் விஷ்ணுரூபன் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவருடன் இணைந்தவாறு எமக்கு மேலும் ஒத்துழைப்புகளை வழங்கிய மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி நாகரெத்தினம், திட்டமுகாமையாளர் ஜெயப்பிரகாஷ் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவித்தனர்.

# ௨0௨௨ மாசி மாதத்தில் நடைபெற இருக்கும் க.பொ.த. உயர் வகுப்பு மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சி வகுப்புக்கள்

( வாஸ் கூஞ்ஞ)

உயர்தர மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து வருடங்களாக மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மன்னார் மற்றும் மடு கல்வி திணைக்களங்கள் ஊடாக விஞ்ஞான, கணித பிரிவு உயர்தர கல்வி மாணவர்களுக்கான முன் ஆய்த்த இரண்டு நாட்கள் பயிற்சி வகுப்புக்கள் கல்வி திணைக்களத்தின் வளவாளர்கள் மூலம் நடாத்தி வந்தது.

2021 ஆண்டுக்குரிய கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை 2022 மாசி மாதத்தில் நடைபெற இருப்பதால் இதற்கான பயிற்சி வகுப்புகளாக இது முன்னெடுக்கப்பட்டு வந்தது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நடைபெற்ற இவ் பயிற்சி வகுப்பில் 250 மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இரண்டு தினங்களாக நடைபெற்ற இவ் வகுப்புக்களின் இறுதிநாள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மற்றும் பெண்கள் தேசிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் கல்வி தொடர்பான பரிசோதனைகள் விளக்கங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பித்தபொழுது எடுக்கப்பட்ட படங்கள்





# இராம நாடகம் வடமோடிக் கூத்தின் இறுவட்டு வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும்

(படுவான் பாலகன்)

இராம நாடகம் வடமோடிக் கூத்தின் இறுவட்டு வெளியீடும், கலைஞர் கௌரவம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் அம்பிளாந்துறை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சு.சந்திரகுமார் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவையின் முன்னெடுப்பில் 2018, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பிளாந்துறையில் ஆற்றுகைசெய்யப்பட்ட இராம நாடகம் வடிமோடிக் கூத்தின் இறுவட்டு இதன்போது வெளியிடப்பட்டதுடன், அதில் ஆடிய கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.







இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி. புளோரன்ஸ் பாரதி கென்னடி, நிகழ்நிலை ஊடான மதுரைகாமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியல்துறை, தமிழியற்புலத்தின் தலைவரும், தமிழ்ப் பண்பாட்டு மரபுச்செல்வங்கள் நடுவத்தின் இயக்குனருமான (பொ) தமிழ்ச்செம்மல், முனைவர் போ.சத்தியமூர்த்தி, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவர் கு.ரவிச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மூதூரில் பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வருதல் 16 நாள் செயற்றிட்டம்

(எப்.முபாரக்)

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு இணைந்து நடாத்திய பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வருதல் 16 நாள் செயற்றிட்டம் தொடர்பான நிகழ்வு புதன்கிழமை(1) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்பிஎம்.முபாரக் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள், பெண்களுக்கெதிரான சித்திரவதைகள், தொழில் துறைகளில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துறையாடப்பட்டன. இந்நிகழ்வில் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மூதூர் பிராந்திய வைத்திய அத்தியட்சகர் , சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகத்தர், மூதூர் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது.

# உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களின் போராட்டம் நியாயமானது

(படுவான் பாலகன்)

உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது நியாயமானது, இவர்களுக்கான நிரந்தர நியமனத்தினை அரசாங்கம் வழங்க வேண்டுமென முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குறிப்பிட்டுள்ளார்.



உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் ஊழியர்களின் போரட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக்குறிப்பிட்டார்.


மேலும் அவர் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாக கடமையாற்றும் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு சங்கங்களினால் வெகுஜன ரீதியான போராட்டம்மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான்குடி (நகரசபை), ஏறாவூர்பற்று (நகரசபை), ஏறாவூர்பற்று (செங்கலடி), கோறளைப்பற்று வடக்கு (வாகரை). கோறளைப் பற்று (வாழைச்சேனை). கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, மண்முனைப்பற்று (ஆரையம்பதி), மன்முனைதென்எருவில்பற்று (களுதாவளை), போரதீவுப்பற்று (வெல்லாவெளி), மண்முனை தென் மேற்கு (கொக்கட்டிச்சோலை), மண்முனை மேற்கு (வவுணதீவு) ஆகிய உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகம், ஒப்பந்தம், பதீலிடு, தினக்கூலி அடிப்படையில் வேலை செய்கின்ற அண்ணளவாக 650ற்கு மேற்பட்ட அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு புதன்கிழமையன்று மாவட்டத்திலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் அரசின் கவனத்தை ஈர்க்குமுகமாக தொழிற்சங்கங்கள் வெகுஜனரீதியான போராட்டங்களை நடாத்தி மகஜர்களை கையளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சபைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் டெங்குவேலைத்திட்டம், வடிகான் தும்பரவு செய்தல், குப்பை குழங்களை, கழிவுப்பொருட்களை துப்பரவு செய்தல். கொரோனா-19 போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருபவர்கள் தங்களுக்கு கிருமித் தொற்று, உயிர் ஆபத்து என்று தெரிந்திருந்தும் தங்களது உயிர்களை துச்சமாக நினைத்து கடமையாற்றி வருவதோடு மட்டுமல்லாமல் பிரதேச சபைகளில் ஏற்படும் நன்மை தீமைகளில் பங்களிப்பு செய்து வருகின்றனர். இவர்களது கோரிக்கை நியாயமானது. எனவே அரசு மிக விரைவாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# 'சைவசமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை' எனும் தோனிப்போருளில் ஆய்வரங்கம்





(சாவகச்சேரி நிருபர்)

சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், காவேரி கலா மன்றம், யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் 30/11/2021 செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி தலைமையில் ''சைவசமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை'' எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கம் இடம்பெற்றது.

நிகழ்வில் இணைத் தலைமைகளாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி, பேராசிரியர் நா.ஞானகுமாரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறை தலைவர் சி.முகுந்தன், முதுநிலை விரிவுரையாளர் பொ.சந்திரசேகரம் ஆகியோர் ஆய்வரங்கத்தின் காலை அமர்வில் தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தனர்.

மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் ந.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் மாவட்ட இயக்குநர் கி.கந்தவேள், சூழலியலாளர் த.தமிழழகன், யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி பணிப்பாளர் சு.சுதர்சன் மற்றும் காவேரி கலா மன்ற பொருளாளர் எஸ்.புத்திசிகாமணி ஆகியோர் பங்கேற்றிருந்தனர். ஆய்வரங்கில்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தேசிய கல்வியல் கல்லூரி மாணவர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு இயற்கை மேலாண்மை தொடர்பான அறிவினை வளர்த்துக்கொண்டனர்.



# இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் "சுரகிமு கங்கா" வேலைத்திட்டத்தின் அங்குரார்பன நிகழ்வு

## அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்தார்





(நூருல் ஹுதா உமர்)

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஜனாதிபதியின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் ''சுரக்கிமு கங்கா'' வேலைத்திட்டம் ''நிலைபேறான சூழலியல் முகாமைத்துவம்'' எனும் கருப்பொருளின் கீழ் நாடுபூராகவும் உள்ள 103 ஆறுகளின் ஆற்றுப் படுக்கையை பாதுகாக்கும் இவ்வேலைத் திட்டத்தில் அம்பாரை மாவட்டத்தில் உள்ள கல்லோயா ஆற்றினை பாதுகாக்கும் நோக்குடன் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பன நிகழ்வு இறக்காமம் ஆஷ்பத்திரிச்சேனையில் புதன் கிழமை இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.சி.எம். அஹமட் நஸீல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை பணிப்பாளர் எம். சிவகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர் ஆகியோருடன் விஷேட அதிதிகளாக இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் .எல். ஹம்சார், சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவான், மத்திய சுற்றாடல் அதிகார சபை அம்பாறை காரியாலய சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் எம்.ஐ.எம். இஷாக் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.பி. யமீனா உட்பட மத்திய சுற்றால் அதிகார சபை உத்தியோகத்தர்கள், நீர்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆஷ்பத்திரிச்சேனை விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சூழலியல் முகாமைத்துவத்தை மேம்படுத்தி இயற்கை வழங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்வேலைத் திட்டமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக ஆறு மற்றும் ஆற்றுப் படுக்கைகளைப் பாதுகாப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக ஆற்றுப் படுக்கைகளில் மண் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஆற்றுப் படுக்கை ஓரங்களில் மரங்களை நடுவதன் ஊடாக ஆற்று வளங்களையும் மண் அரிப்பையும் பாதுகாக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# மன்னாரில் இந்தியாவிலிருந்து வந்து செல்வோர் மற்றும் போதை பொருள் போன்றவை எச்.ஐ.வி நோய்க்கு மிக சவாலாக அமைகின்றது

## வைத்திய நிபுணர் தக்ஷாயினி அருள்பிரசாத்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் இந்தியாவிலிருந்து வந்து செல்வோர் மற்றும் போதை பொருள் போன்றவை எச்ஐவி நோய்க்கு மிக சவாலா அமைகின்றது. ஆகவே இவ் நோயிலிருந்து விடுபடுவதற்கு சமூக மட்டத்திலுள்ள பெரியவர்கள் அதிகாரிகள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கி மன்னாரில் இவ்நோய்க்கு உள்ளாகாமல் இருப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பாலியல் சுகாதாரம் மற்றும் எச்ஐ.வி. மருத்துவ விஷேட வைத்திய நிபுணர் தக்ஷாயினி அருள்பிரசாத் இவ்வாறு தெரிவித்தார்.

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வியாழக்கிழமை (03.12.2021) காலை கருத்தரங்கு இடம்பெற்றது.

இவ் கருத்தரங்கில் சுகாதார சேவைகள் திட்டமிடல் வைத்திய அதிகாரி டெனி, பாலியல் சிகிச்சை வைத்திய அதிகாரி நி.தயானி, சுகாதார சௌக்கிய பரிசோதகர் அன்பழகன், கல்வி திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் இது சம்பந்தமான திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட பாலியல் சுகாதாரம் மற்றும் எச.;ஐ.வி. மருத்துவ விஷேட வைத்திய நிபுணர் தக்ஷாயினி அருள்பிரசாத் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்;

1988 லிருந்து உலக எயிட்ஸ் தினமானது ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

இதற்கமைவாக இந்த வருடமும் நாம் இவ் தினத்தை நினைவு கூறுகின்றோம். 1981 இல் முதன்முதலாக உலகத்தில் எச்ஐவி நோயாளி கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 198% லிருந்து 2019 வரையான காலப்பகுதியில் %9.3 மில்லியன் மக்கள் இவ் எச்ஐவி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் 36.3 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயினால் இறந்துள்ளனர். 2020 இறுதியில் 3%.% மில்லியன் மக்கள் இவ் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தற்பொழுது 1.5 மக்கள் இவ் நோயினால் 2020 ஆம் ஆண்டு புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையை பொறுத்தமட்டில் 1986 இல் முதன்முதலாக வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரால் இவ் நோய் இருந்ததாக அறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 198% இல் உள்நாட்டவர் இவ் நோய்க்கு உள்ளாகியது கண்டு பிடிக்கப்பட்டது.

1987 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் 3994 பேர் இவ் எச்ஐவி நோயாளர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 583 நபர்கள் இவ் நோயினால் இறந்துள்ளனர். இவ்வாறு தொற்றாளர்களில்



93 சிறார்களும் அடங்குவர்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் 2021 வரை 10 பேர் இவ் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு ஒருவர் இனம் காணப்பட்டதில் அவர் எய்ட்ஸ் தொற்றோடே இனம் காணப்பட்டவர்களாவார்.

ஒரு எயிட்ஸ் நோயாளி 2 வருடம் தொடக்கம் 10 வருடங்கள் வரை எவ்வித அறிகுறி இல்லாமல் ஒரு சாதாரண மனிதராகவே காணப்படுவார்.

இதன்பின் இவர்கள் இனம் காணப்பட்டபின் வைத்தியசாலையை நாடும்போது இவர்களை காப்பாற்றுவது ஒரு கடினமானதாக இருக்கும்.

ஆகவேதான் இவ் நோய் தொடர்பாக சந்தேகம் ஏற்படும்போதே இவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

2020 இல் இலங்கையில் புதிய எச்ஐவி நோயாளராக 363 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை 2019 ஆம் ஆண்டு 439 பேர் இவ் நோயாளராக இனம் காணப்பட்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் 17 வீதம் வீழ்ச்சிக்கு காரணம் என்னவென்றால் இவ் நோய்க்கான பரிசோதனையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

இதற்கு முக்கிய காரணம் கொவிட் தொற்றே ஆகும். அதாவது பயணத் தடை மக்கள் ஒன்றுகூட முடியாத நிலையாலேயே இவ் வீழ்ச்சி எற்பட்டது.

இருந்தபோதும் எமது நிலையங்களில் நாங்கள் இவர்களுக்கான பரிசோதனைகளை மேற்கொண்டு வந்தோம் வருகின்றோம்.

எச்ஐவி நோயாளர்கள் தங்களை அடையாளப்படுத்தவோ அல்லது வெளிப்படுத்தவோ தயக்கம் காட்டுகின்றனர்.

ஏனென்றால் இவர்களை சமூகம் ஏற்றுக் கொள்வதில் நிலவுகின்ற தயக்கமே காரணமாகும். இதனால்தான் பலர் இவற்றுக்கான சிகிச்சை பெறுவதில் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் இவ் நோய் மேலும் பரவக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகின்றன.

ஆகவேதான் இவற்றை இல்லாமல் ஒழிக்க இவ் நோய்க்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு சமூகத்திலே சமத்துவம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்

அத்துடன் கலங்கப்படுத்துதல் பாகுபடுத்தல் என்பவற்றை சமூக மட்டத்தில் ஒழித்து கட்டுவதன் மூலமும் இவர்களை வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்கும்போது இவ் நோயை மட்டுபடுத்த முடியும்.

இதனால்தான் இவ் வருடம் சமத்துவமின்மையை ஒழிப்போம் பெருந் தொற்றை ஒழிப்போம். எயிட்சை ஒழிப்போம் என்ற கருப்பொருளில் இவ் தினம் கொண்டாடப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் இந்தியாவிலிருந்து வந்து செல்வோர் மற்றும் போதை பொருள் போன்றவை எச்.ஐ.வி நோய்க்கு மிக சவாலாகஉ அமைகின்றது.

ஆகவே இவ் நோயிலிருந்து விடுபடுவதற்கு சமூக மட்டத்திலுள்ள பெரியவர்கள் அதிகாரிகள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கி மன்னாரில் இவ்நோய்க்கு உள்ளாகாமல் இருப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டு நிற்கின்றோம் என்றார்.

# மனித நேயன் இர்ஷாத் ஏ காதர் அரச விருது பெற்றார்

(பொலிவேரியன் நிருபர் எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான அரச தேசிய விருதினை நேத்ரா தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளர் மனித நேயன் இர்ஷாத் ஏ.காதர் பெற்றுக் கொண்டார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச தொலைக்காட்சி ஆலோசனைக்குழுவின் ஏற்பாட்டில் 15ஆவது வருடமாக இடம்பெற்ற 2020ஆம் ஆண்டுக்கான தொலைக்காட்சி கலை விருது வழங்கும் விழா கடந்த 29ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் தொலைக்காட்சியில் சிறந்த தமிழ் செய்தி வாசிப்பாளருக்கான விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டு, சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான அரச தேசிய விருதினை நேத்ரா தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளர் மனித நேயன் இர்ஷாத் ஏ.காதர் பெற்றார்.

2019 ஆம் ஆண்டில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மதிப்பீடு



செய்யப்பட்ட வேளை, தொலைக்காட்சியில் சிறப்பாக செய்திகளை முன்வைத்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கல்முனை மாநகர சபையின் வருமான அறவீடு டிஜிட்டல் மயமாகிறது

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஐரோப்பிய யூனியன் அனுசரணையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினால் (யூ.என்.டி.பி) உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்றிறனை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையின் வருமான அறவீடுகளை டிஜிட்டல் முறைமையூடாக செயற்படுத்தும் சேவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.



றகீப் தலைமையில் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமிர் ஷாலிஹ் ஒருங்கிணைப்பில் புதன்கிழமை (01) பிற்பகல், முதல்வர் செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.மணிவண்ணன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் சக்கி அதாஉல்லா, கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், எம்.எஸ்.எம்.நிசார், பொன் செல்வநாயகம், கே.சிவலிங்கம், சட்டத்தரணி ரொஷான் அக்தர், எம்.எஸ்.எம்.ஹாரிஸ், எஸ்.சந்திரசேகரம் இராஜன், எம்.ஐ.ஏ.அஸீஸ், ஏ.ஆர்.செலஸ்டினா, நடராசா நந்தினி, யூ.என்.டி.பி. நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஆர்.சுமித்ரா, மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாத், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எச்.ஏ.றியாஸத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த இலத்திரனியல் செயலியின் நோக்கம், பயன்பாடுகள் மற்றும் அனுகூலங்கள் தொடர்பாக அதன் வடிவமைப்பாளர் காமிஸ் கலீஸ் சமர்ப்பணத் தொகுப்பாக விளக்கமளித்தார். அத்துடன் வெளிநாட்டில் இருந்து விசேடமாக கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் கருவிகள் மாநகர சபையின் வருமான அறவீட்டாளர்களுக்கு இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இதன் மூலம் கல்முனை மாநகரசபையின் அனைத்து வருமான அறவீடுகளும் இலத்திரனியல் முறைமையின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன. இதனால் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்கள் தம்மிடம் வருகின்ற மாநகரசபை வருமான அறவீட்டாளர்களிடம் செலுத்துகின்ற எந்தவொரு வரி மற்றும் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை அதே இடத்தில் இலத்திரனியல் கருவி மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அத்தொகை உடனடியாக ஒன்லைன் ஊடாக மாநகர சபையின் அலுவலக கணிணிப் பதிவில் வரவு வைத்துக் கழிக்கப்படும். குறித்த இலத்திரனியல் பற்றுச்சீட்டில் செலுத்திய தொகை மற்றும் நிலுவைத் தொகை உள்ளிட்ட விபரங்கள் அடங்கியிருக்கும் எனவும் மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.






# ஆலையடிவேம்பு ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் ஏற்பாட்டில் போதுமக்களுக்கான குடிநீர் பேற்றுக்கோடுக்கும் நடவடிக்கை

(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு ஆயுள் வேத மத்திய மருந்தகத்தின் ஏற்பாட்டில் அப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்களுக்கான குடிநீர் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக புதியதொரு நீர்தாங்கி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் அதில் இருந்து பொதுமக்கள் நீரைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.



கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்திய தொடர்பாளர், வைத்தியர் எம்.எ.நபீலின்; வழிகாட்டலில் ஆலையடிவேம்பு ஆயுர்வேத மத்திய மருந்தகம் பொறுப்பதிகாரி வைத்தியர் .த.குவிதாகரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், வைத்தியர் திருமதி ஆமிலா ஜமால்டீன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் நவநீதராஜா மகாசக்தி நிறுவன தலைவி மங்கயற்கரசி செயலாளர் திலகராஜன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு நீர் வழங்கும் நடவடிக்கையினை ஆரம்பித்து வைத்தனர்.



குறிப்பிட்ட பிரிவில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வைத்தியசாலையை அன்மித்த மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனை கருத்தில் கொண்ட ஆயுர்வேத மத்திய மருந்தகம் பொறுப்பதிகாரி குடிநீர் தாங்கி ஒன்றினை பெற்றுக்கொடுத்ததுடன் தொடந்தும் நீரை வழங்குவதற்கான கோரிக்கையினை பிரதேச சபை தவிசாளரிடம் முன்வைத்திருந்தார்.


இந்நிலையில் தவிசாளரின் ஒத்துழைப்போடு பொதுமக்களுக்கான குடிநீர் வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





© Christoph Hardt/Future Image/imago images

# யேர்மனியில் பிறந்த தமிழ் இளைஞனின் முன்மாதிரி!



## அள்ளிக் கொடுக்கும் யேர்மனி.. அழிவுகளில் தத்தளித்தது..

## இயற்கை அழிவுகள் யாரைத்தான் விட்டு வைத்தது...

இந்த ஆண்டு யூலை மாதம் யேர்மனியின் சில பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை அழிவான மழைவெள்ள அனர்த்தத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்ததுடன் கோடிக்கணக்கான சொத்துக்கழும் அழிந்தன. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

யேர்மனியைப் பொறுத்தளவில் ஐரோப்பாவில் செல்வந்த நாடாகவும் வசதிபடைத்த நாடாகவும் காணப்படுகின்றது. உலகில் எப்பகுதிகள் என்றாலும் இயற்கை அழிவுகள், போர் அனர்த்தங்கள், நிவாரணப்பணிகள், மனிதநேய உதவிகள் என்றால் முன்னின்று உதவும்நாடு என்றால் அது யேர்மனியாகத்தான் இருந்துவருவது யாவருக்கும் தெரிந்த விடையமாகும்.

பிறருக்கு அள்ளிக்கொடுத்து மனிதநேயம் காக்கும் யேர்மனி நாட்டுக்கு இந்தவருடம் ஆடி மாதத்தில் ஏற்பட்ட மழை வெள்ள அனர்த்தத்தால் நாடு சற்று நிலை குலைந்து அரசியல் திருப்பங்களும் ஏற்பட்டன. இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் நம் தமிழ் மக்களும் சிலர் உதவிகளையும் செய்திருக்கிறார்கள். அப்படியான ஒரு தமிழ் இளைஞனின் முன்மாதிரியான செயற்பாட்டைத்தான் உங்களுக்கு அறியத்தருகின்றோம்..

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்கள் பல சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது சிறப்பாகும். இவற்றைவிட மனித நேயப் பணிகளையும் செய்யத் தவறுவதிலலை. நம் தாயகத்தில் நடைபெற்று



முடிந்த போர் அனர்த்தங்கள், மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை அழிவுகளுக்கும் அவ்வப்போது உதவி வருகிறார்கள் என்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

இன்னும் ஒருபடி மேலாக சர்வ தேச அமைப்புக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி எயி;ட்ஸ், போர், கொரோனா மற்றும் இயற்கை அழிவுகளான சுனாமி, மழைவெள்ளம், கடும்வறட்சி, பசி, பட்டினி போன்ற வற்றிற்கும் தம்மாலான உதவிகளை வழங்கிவருகிறார்கள்.

புலம் பெயர்ந்தாலும் நமது முன்னோரின் வழிகாட்டலால் வளர்க்கப்பட்ட இன்றைய இளைய சமுதாயம் பல நற்பணிகளைச் செய்துவருவது கவனிக்கதக்க விடையமாகும். சிலர் தாம் வந்த பாதையை மறந்து, இன, மொழி, மத, கலை, கலாச்சார, பண்பாடுகளை இழந்து வாழ்ந்தாலும் பலர் இவைகளைக் கடைப்பிடிக்கும் பலம் எமக்குண்டு.பண்பாடும் நமக்குண்டு என வாழ்ந்து வருவது நல்லதோர் விடையமாகவே பார்க்க வேண்டும.;

அந்த வகையில் இங்கு பிறந்து வளர்ந்தவர்தான கபிலன் சிவநேசன். இவர் தமிழ் ஆர்வலர். இங்கு 12 ம் வகுப்பு வரை தமிழ்க் கற்றவர். அத்துடன் பல்கலைக் கழகத்தில் கட்டிட கலைஞர் பட்டம் பெற்று தொழில் செய்கிறார்.

யேர்மனியில் கடந்த ஆடி மாதம் 16ம்திகதி வட மேற்குப் பிராந்தியத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிரழிவும் வீடுகள், சொத்துக்கள் அழிந்து அவலப்பட்ட சம்பவத்தை எல்லோரும் நன்கு அறிந்ததே.அதனால் கூடுதலாகப் ஆர்வைலேர்(Ahrweiler),ஏர்ஃப்சட்( Erftstadt) நகரங்கள் பாதிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில்தான் கபிலன் சிவநேசன் ஆர்வைலெர் நகர மக்களுக்கு உதவி செய்வதற்கு சென்றிருக்கிறார். பரவலாக நிறைய இளையோர்,பெரியோர்,சாரணர் இயக்கம், தீயணைப்பு படை எல்லோரும் இணைந்து உதவிகளைச் செய்தனர்.அங்குஅதிகமான வீடுகள் ,வீதிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருந்தது.எல்லோரும் உலகத் தொலை காட்சிகளில் பார்த்திருப்பீர்கள்.

இச் சம்பவங்களைக் கண்ணுற்ற கபிலன் நித்திரை இழந்து தவித்தாலும் மனம் சோர்வடையாமல் அந்தமக்களுக்கு ஏதாவது செய்துவிடவேண்டுமெனத் துடித்தெழுந்தார். அவர் தீயணைப்பு படையில் ஒரு அங்கத்தவராக இருப்பதால். அவர் தன்னுடைய நகர சஞ்சிகைக்கு தகவல் கொடுத்திருந்தார். ஆர்வைலெர் மக்களுக்கு உதவிசெய்ய விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளும்படி கோரியிருந்தார். அதற்கு பதிலும் கிடைத்தது. எல்லோரும் உதவி செய்ய முன்வந்தனர்.

ஒரு பென்ஸ் கார்க்கம்பெனி ஒரு பெரிய லாரி கொடுத்துதவியது. அத்துடன் அதற்கு ஓட்டுனரும் கொடுத்துதவி செய்தார்கள்.கபிலனுடன் அவருடைய நண்பாகளும்; சேர்ந்து செயல்பட்டனர். சிலர் பணம் உதவிகளும் செய்தார்கள்.கட்டிட விற்பனையாளர்கள் வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களைக் கொடுத்து உதவினர். வங்கி

அந்த லாரிக்கு தேவையான பெற்றோலை கொடுத்துதவியது.

இப்படி நிறைய பொருட்கள் சேர்ந்தது.அவற்றை லாரியில் ஏற்றிச் சென்று ஆர்வையலரில் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்துதவினர். கிடைத்த பணத்தில் மக்களுக்கு தேவையான பல பொருட்களை வேண்டிக் கொடுத்துதவினார்கள்.

கள்தான். ஆனல் ஒருதமிழ்ப் பிள்ளை இப்படி ஒரு முயற்சி எடுத்து பேப்பரில் போட்டு இவ்வளவு பொருட்களை சேகரித்து மக்களுக்கு உதவியது பெரிய செயல் என்று சொல்லவேண்டும்.யேர்மன் மக்களே வியந்து பாராட்டினார்கள் என்றால் தமிழரின் மனித நேயம் மனிதப் பண்பு நிறைந்திருக்கின்றது எனச் சொல்லலாம்.எனவே எங்களுடைய அடுத்த தலைமுறை தமிழரின் முகவரியை இங்கு தடம் பதிக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்கே ஆர்வைலர் நகர மக்களுககு உதவி செய்ய ஒவ்வொரு சனிக்கிழமையும் 2,500 பேர் வருவார்களாம், ஞாயிற்றுக்கிழமை 1,500 பேர் தான் நிற்பார்களாம். ஆனல் இன்னும் மக்கள் சென்று உதவிய வண்ணம் இருக்கிறார்கள். கபிலனிடம் இன்னும் பணம் சேர்ந்திருக்கிறது. இன்னும் உபகரணங்கள் தேவையாக இருப்பதால் வாங்கி கொடுப்பதாகவும். மார்கழி மாதக் குளிருக்கு முன்பதாக அவர்கள் வீட்டு வேலைகள் முடித்து அங்கு அவர்கள் மீண்டும் வசிக்க வேண்டும் என்று துரிதமாக செயல்படுவதாகக் கூறினார்.

ஆகவே அவர் தன்னுடைய உதவிகளை மேலும் முன்னெடுக்கவேண்டும், கடவுள் அவருக்கு அனைத்து நலனையும் கொடுக்க வேண்டும் என் வாழ்த்துகிறோம். கபிலனின் மனித நேயப் பணிக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துவோம்.தாயகத்துக்கும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் இளையோரின்; மனித நேயப் பணிகள் சிறக்கும் என நம்புவோம்!.

செல்வன் கபிலனைப் போல இங்குவாழும் இளம் சமூகத்தினர் விழிப்படைந்து நம் தாயக துயர்துடைப்பிலும் பங்குகொள்ள வேண்டும். ஒரு சிலர் உதவிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுதலுக்குரியவர்களே!.. ஆனால் ஆடம்பரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாராயினும் இப்படிப்பட்ட மனித நேய உதவிகளைச் செய்ய வேண்டும்!..இனம், நிறம், மத, மொழி போன்று வேறுபாடுகள் கடந்து மனிதம் காக்க அனைவரும் முன்வர வேண்டும்.!.. முன்னின்று உதவுபவர்களை வாழ்த்துவோம்!..

ஜேர்மனி ''மண்''சஞ்சிகையின் எழுத்தாளர் திருமதி கெங்கா ஸ்ரான்லியும்..
''மண்'' சஞ்சிகையின் பிரதான ஆசிரியரும்... 28.11.2021.



அன்பான வாசகர்களுக்கு



சுபீட்சம்
நிகழ்நிலைப்பத்திரிக்கை
சிலவாரங்களுக்கு
வாரத்தில் திங்கள்,
புதன், வெள்ளி ஆகிய
தினங்களில்
மாத்திரமே வெளிவரும்.
உடனடிச்செய்திகளுக்கு
www.supeedsam.com
எனும் எமது
செய்தித்தளத்துடன்
இணைந்திருங்கள்

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 06

# மூத்த பரதநாட்டியக் கலைஞர் கலாபூஷணம் சாரதாதேவி சிறிஸ்கந்தராசா கலைஞரின் சாதனைப் பயணம்

**ப-பாவம், ர-ராகம், த-தாளம், ம்-ஸ்ருதி இவை நான்கும் சேர்ந்ததே பரதம் எனப்படும். பாரத தேசத்தில் முதன்முதலாக தோன்றியதால் பரதநாட்டியம் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் பரத முனிவரால் முதன் முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதால் இது பரதநாட்டியம் எனும் பெயர் பெறுகிறது.**

அவ்வகையில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருக்கோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், தனது ஆரம்பக் கல்வியினை மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், உயர் கல்வியினை பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலயத்திலும் பயின்றவரும,; திருக்கோணமலை மண்ணின் பரதநாட்டியத்துறையில் 45வருடங்களுக்கு மேலாக கலைச்சேவையில் ஈடுபட்டு வருபவரும், திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும், இயக்குனருமான மூத்த பரதநாட்டியக் கலைஞர் நாட்டிய வித்தகி, கலாபூஷணம், திருமதி. சாரதாதேவி சிறிஸ்கந்தராசா அவர்களின்; சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.

இவருக்கு பரதத் துறையில் ஏற்பட்ட அதீத ஆர்வத்தில் நான்காம் தரம் பயிலும் காலத்திலே இவரது தந்தை அமரா. வீரகத்தி விநாயகராசாவின்; வழிகாட்டலிலும், உறுதுணையிலும் இவர் நடன ஆரம்பக் கல்வியினை கொக்குவில் அமரர.;ஏரம்பு சுப்பையா பிள்ளையிடமும், செல்வி.குமாரசுவாமி திரிபுரசுந்தரியிடம் பயின்றார். தொடர்ந்து இந்தியா சென்று தமிழ்நாட்டில் அமரர்.பரதசூடாமணி அடையார் கே.லக்ஷ்மணனிடம் முறையாகக் கற்று பரதநாட்டியத்திலும், நட்டுவாங்கத்திலும் டிப்ளோமா பட்டத்தினைப் பெற்று 1972ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தார். அதில் நட்டுவாங்கம் அமரர் அடையார் கே.லக்ஷ்மணனினால் செய்யப்பட்டது. தொடர்ந்து சிறப்பு அரங்கேற்ற நிகழ்வு திருக்கோணமலை அர்ச் சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. 1975இல் நடன ஆசிரியராக திருக்கோணமலை ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியிலும், திருக்கோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தியாலத்தில் பகுதிநேர நடன ஆசிரியராகவும் பணி புரிந்தார். 1994ஆம் ஆண்டு வரை ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியிலேயே பணி புரிந்து ஓய்வு பெற்றார். இலங்கை ஜனநாயகக் குடியரசின் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் 1977, 19%8ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்று ஓர் பயிற்றப்பட்ட பரத நாட்டிய ஆசிரியையும் இவர் ஆவார். இவ்வாறு 1980இல் திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றம் என்ற மன்றத்தினை நிருவகித்து அதன் இயக்குனராக கடமையாற்றி வருகிறார்.

இவர் ஆசிரியையாக பணிபுரிந்த போது பல கலைச் சேவைகளை ஆற்றியுள்ளார். அவ் வகையில், திருக்கோணமலையில் இயங்கி வந்த விக்னேஸ்வரா இசை நடனக் கலாமன்றத்தில் 19%2 தொடக்கம் 19%8 வரை நடன வகுப்புக்களை நடாத்தி நவராத்திரி விழா, சிவராத்திரி விழா போன்ற முழு நேர நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளார். அத்துடன் வட இலங்கை சங்கீத சபை ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆசிரியர்களை வரவழைத்து மாணவிகளுக்கு பரீட்சைகள் நடாத்தி பெறுபேறுகள் வழங்கியுள்ளார். 19%5 தொடக்கம் 1994 வரை கடமையாற்றிய இரு பாடசாலைகளிலும் ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ்த் தின விழாப் போட்டிகளின் நடனப் பிரிவில் பாடசாலை மாணவிகளைப் பங்கேற்கச் செய்து, அகில இலங்கை ரீதியாக பல தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்ததோடு க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார். 1980இல் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு வட- மாநிலக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சங்கீத, நடன ஆசிரியர்களுக்கான வதிவிட சேவைக்கால பயிற்சிகளிலும் பங்குபற்றியுள்ளார். 1988இல் மட்டகளப்பு மாவட்ட கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சி நெறிக்கு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். 1989இல் வடக்குகிழக்கு மாகாண அரசின் ஓராண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளை வழங்கி நட்டுவாங்கமும் செய்துள்ளார். 1990 தொடக்கம் 1991ஆம் காலப்பகுதியில் திருக்கோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வில் விரிவுரையாளராகப் பணிபுரிந்துள்ளார். 1991 தொடக்கம் 2008 வரை அழகியற்கலை ஆசிரிய ஆலோசகராக திருக்கோணமலையில் கடமையாற்றிய காலப்பகுதியில் இளைஞர் கழகத்தால் நடாத்தப்பட்ட பல கலை நிகழ்ச்சிகளுக்கு நிகழ்ச்சிகள் கொடுத்துள்ளார். 1997இல் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட நூல் வெளியீட்டுக் கண்காட்சியில் கலந்து கொண்டு சகுந்தலை என்ற நாட்டிய நாடகத்தை தயாரித்து நட்டுவாங்கமும், அன்னம் விடு தூது என்ற நாட்டிய நாடகத்திற்கு நெறியாளராகவும் நெறிப்படுத்தியுள்ளார். வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு பிரதம பரீட்சகராகவும், க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளின் பிரதம பரீட்சகராகவும், உதவிப் பரீட்சகராகவும் கடந்த பல வருடங்களாக கடமையாற்றியுள்ளார். தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு TUTOR ஆக கடமையாற்றியதோடு NATIONAL EDUCATION CENTER ல் பரத நாட்டியத்திற்கு ஆசிரியர் கைநூல் எழுதுவதற்கும், தொலைக்கல்வி பயிலும் ஆசிரியர்களுக்கு கைநூல் தயாரிப்பதற்கு மகரகமவுக்கு சென்று பணியாற்றியுள்ளார். இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு பாடசாலைகள் மூலமாக பல நடன நிகழ்ச்சிகளை வழங்கி வந்துள்ளார் என்பதோடு பரதநாட்டியம் பயிலும் மாணவிகளுக்காக பாடத்திட்டத்திற்கமைவாகவும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு அமைவாகவும் மாணவர்கள் இலகுவாக கற்கும் வகையில் நடனம் என்ற தலைப்பில் 1991, 1994ஆம் ஆண்டுகளில் இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.



இவரது திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றத்தின் மூலம் மாணவிகளுக்கு சனி, ஞாயிறு நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் நடன வகுப்புக்களை நடாத்தி வருவதோடு ஆண்டுதோறும் நவராத்திரி விழாவை முழு நாள் நிகழ்ச்சியாகவும் நடாத்தி வந்துள்ளார். ஆரம்பகாலத்தில் 50ற்கும் மேற்பட்ட மாணவிகளையும் தற்போது 10ற்கும் மேற்பட்ட மாணவிகள் இவரிடம் நடனத்தை கற்று வருகின்றனர். இவரிடம் நடனம் பயின்ற மாணவிகளுக்கு அரங்கேற்றமும் செய்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரிடம் நடனம் பயின்ற மாணவிகளில் அதிகமானோர் இன்று இலங்கை பூராகவும் உள்ள பாடசாலைகளில் நடன ஆசிரியர்களாக பணிபுரிந்து வருவதுடன், திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள அதிகமான பாடசாலைகளிலும் நடன ஆசிரியர்களாக பணிபுரிந்து வருகின்றார்கள் என்பதுடன்; இலண்டன், கனடா, ஜேர்மனி, சுவிஸ், நோர்வே ஆகிய கடல் கடந்த பிரதேசங்களிலும் நடன ஆசிரியைகளாகத் திகழ்ந்து வருகின்றார்கள் என்பது சிறப்பான விடயமாகும். மேலும் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு பல தனி, கூட்டு நடன நிகழ்ச்சிகளை தயாரித்தும் நெறிப்படுத்தியும் வழங்கியுள்ளார். அத்துடன் ரூபவாஹினிக் கூட்டுதாபனத்தின் 15வது ஆண்டு கொண்டாட்டத்தின் போது சிவதாண்டவம் என்ற நிகழ்ச்சியை கொண்டு சென்று நடாத்தியுள்ளமையோடு தற்சமையம் தன்னிடமுள்ள மாணவிகளுக்கு பரதக்கலையினை தான் பயிற்றுவிப்பதோடு தன்னிடம் இக் கலையினை பயின்ற இளம் மாணவியையும் கொண்டு நடாத்தி வருவதோடு அவ் வளர்ந்து வரும்; மாணவிகளுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் ஆசானாகவும், ஆலோசகராகவும் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க பெருமையான விடயமாகும்.



1972ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இவரது அனுபவமானது கலையில் முழுமையாக மனப்பூர்வமாக ஈடுபட்டு வருபவருக்கு வயது என்பது ஓர் தடையல்ல. அவ் வகையில் எனது உடல்நிலையில் ஒரு சில வலிகள் ஏற்பட்டாலும் அதை நிவர்த்தி செய்து விட்டு மீண்டும் பரதக் கலையில் ஈடுபடும் ஆர்வம் மென்மேலும் அதிகரிக்கின்றது. கலையினை ஆத்மீகவுணர்வுடன் நேசிக்கும் ஓர் கலைஞனானவன் அக் கலைத்துறையில் முகங்கொடுக்கின்ற எந்தவொரு சவாலையும் பொருட்படுத்தாமல் அதனை சரியான வழியில் தகர்த்தெறிந்து தன்னை மேலும் தயார்ப்படுத்துவதற்குரிய உத்தியாக கைக்கொள்ள வேண்டுமென்பதே அனுபவத்தின் மூலம் தான் கண்டு கொண்ட உண்மையாகும் என இக் கலைஞர் குறிப்பிடுகின்றார்.

இவரது பரதக் கலைக்கு அவரது தந்தையான அமரர். வீரகத்தி விநாயகராசர் ஆரம்ப காலத்தில் உறுதுணையாக இருந்ததோடு இன்று இவருக்கு பரதக்கலையில் இவரிலும்; விட அதீத ஆர்வத்துடனும்,; அக்கறையுடனும் கலையினை நேசிப்பவராகவும் இவரது கணவர் நல்லையா சிறிஸ்கந்தராசா உற்ற உறுதுணையாக இருந்து வருகிறார். அவரின் பரதம் மீதான நல் எண்ணப் பார்வையும், அதிக ஒத்துழைப்பும் இவரை இன்றுவரை நடனத் துறையில் வெறுப்பில்லாமல், சலிப்பில்லாமல் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் திடசங்கற்பத்திற்கு வழியமைக்கின்றார் என்பதை பெருமையாக இக் கலைஞர் கருதுகிறார்.

இவர் பரதத் துறையில்; பல கௌரவிப்புக்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். 2001, 2008 ஆகிய ஆண்டுகளில் சுவிஸ்லாந்து நாட்டில் இந்து மாமன்றம் நடாத்திய சர்வதேச நடனப் பரீட்சைகளுக்கு கடமையாற்றி கௌரவிக்கப்பட்டதோடு 2004ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட நாட்டிய மயில் பரத நாட்டியப் போட்டிக்கு நடுவராகப் பணியாற்றியமைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2004இல் திருக்கோணமலை சுப்பர் சங்கீத இசைக்கழகத்தினால் பரதத் துறையில் 30வருடக் கலைப்பணி ஆற்றியமைக்காக கௌரவமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களால் மட்டகளப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூடயில் நடாத்தப்பட்ட கலைஞர் கௌரவிப்பு விழாவில் திருக்கோணமலையில் இருந்து அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். 2003இல் கலைப் பண்பாட்டுக் கழகம் நடாத்திய இசை-நடன-நாடக விழாவில் நாட்டிய வித்தகி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2009இல் சக்தி தொலைக்காட்சி நிறுவனம் கொழும்பில் விமர்சையாக நடாத்திய சக்தி நாட்டிய கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டு நாட்டிய வித்தகி என்ற வாழ்நாள் விருதும் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இராஜரெட்ணம் நடனாலயத்தின் 18ஆவது ஆண்டு விழாவில் இவரும், அவரது கணவரும் கௌரவப்படுத்தப்பட்டு விருது வழங்கப்பட்டது. 2012இல் கலாபூஷண அரச விருது விழாவில் பரதநாட்டியத் துறையில் கலாபூஷண விருது கிடைக்கப்பெற்றதோடு, 2013இல் கௌரவ முதலமைச்சர் விருதும் வழங்கப்பட்டது. 2013இல் அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி ஆலய தொண்டர் சபையால் திருக்கோணேஸ்வரர் நகர்வலத்தை முன்னிட்டு நிகழ்வுகள் வழங்கியமைக்காக சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு அதே ஆண்டில் திருக்கோணமலை நகரில் நாட்டியத் துறையில் 34வருடங்கள் ஆற்றிய சிறப்புப் பணிக்கும், அதன் மேன்மைகளுக்கும் பங்களித்தமைக்காக் நகரமுதல்வர் விருதும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2013ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடனத்துறைக்கு சிறப்பாக சேவையாற்றியதை கௌரவித்து வித்தகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இலங்கையின் நடனக்குழு, அரச நடன மற்றும் நாட்டிய நாடக விழாவை வருடா வருடம் சிறப்பாக கொண்டாடிய 2014ஆம் ஆண்டுக்கான அரச நடன விழா 2015இல் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது இலங்கையில் நாட்டிய நாடகக் கலையை மிளிரச் செய்வதன் பொருட்டு சேவையாற்றியமைக்காக நடனத் திலகம் விருதும், நாட்டிய வாரிதி விருதும் வழங்கப்பட்டதோடு 2019இல் கலைமாமணி விருதும் வழங்கப்பட்டது.

ஒரு மூத்த கலைஞராக கலைத் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு இவர் கூற விரும்புவதாவது, எக் கலையாக இருந்தாலும் அக் கலைக்கு அடித்தளமாக திகழ்பவர்கள் மாணவச் செல்வங்களே ஆவர். தற்போது கலைத்துறையில் மாணவர்கள் அதிகமானோர் ஆர்வத்துடன் ஈடுபட்டாலும் கலை நிகழ்ச்சிகளை பார்ப்பதிலும், கேட்பதிலும் சற்று தளர்வான ஓர் நிலை காணப்படுகின்றது. அதனை தவிர்த்து நம் மண்ணில் நடைபெறும் பாரம்பரிய கலைகளினை பார்த்தும் கேட்டும் தங்களை மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். காரணம் குருவிடம் கலையினைப் பயின்றாலும் வெளி உலகத்தில் நடைபெறும் கலைசார் விடயங்களை அவதானிக்கும் போது மாணவர்கள் தங்களைத் தானே தயார்படுத்திக் கொண்டு புத்துணர்வுகளையும், நல் எண்ணங்களையும் உருவாக்கிக் கொள்ள முடியும். மற்றும் நேரந் தவறாமை என்ற முக்கிய விடயத்தை கவனத்திற் கொள்வது மிக முக்கியமான தேவையாக தற்காலத்தில் உணர முடிகிறது. இவ்வாறாக மாணவர்கள் கலை மீதான நிறைவான ஈடுபாட்டிற்கு ஆசிரியர்களும், பெற்றோரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது இவரது எதிர்பார்ப்பாகும். நாட்டியத்துறையில்;; ஈடுபட்டு வரும் இளங் நாட்டியக் கலைஞர்களுக்கும் இவர், எக் கலையாக இருந்தாலும் அக் கலையினை தெய்வீகவுணர்வுடன், மன நெகிழ்வுடன் அதில் ஈடுபட வேண்டும். பரதக் கலையினை முறைப்படி முழுமையாக கற்றுத் தேர்ந்த பின்னே அரங்கேற்றம் செய்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து பரதத்தினைக் கற்பிக்கும் போது மாணவர்களுக்கு எளிய முறையில் நேர்த்தியான தன்மையுடன் கற்பிக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் நல் ஒழுக்கமும் நற் சிந்தனையும் மிக்க கலைத் துறையின் மீது ஆர்வமும் அக்கறையுமுள்ள மாணவச் செல்வங்களை உருவாக்க முடியும் எனக் கருதுகிறார்.

**திருக்கோணமலை மண்ணில் பரதக் கலைத் துறையில் இன்று வரை அதீத ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் இக் கலைக்காகவே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி சேவையாற்றி வருவதோடு, இக் கலைத் துறையில் வளர்ந்து வரும் இளங்கலைஞர்களுக்கும் களம் அமைத்து அவர்களுக்கான கலைப் பிரவேச வாய்ப்பினையையும் ஏற்படுத்தி வரும் இக் கலைஞர் மென்மேலும் பரதத் துறையில் பல பணிகளைப் புரிய நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் பெற வேண்டுமென பிரார்த்திப்பதோடு இக் கலைப் பணி தொடர இக் கலைஞரை வாழ்த்துவோம்.**

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**



**தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**

# கிழக்குமாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் குற்றச்சாட்டு

(எஸ்.சபேசன்)

ஒரு சமூகத்தினை கட்டுக்கோப்பான சமூகமாக மாற்றுவது கல்வியாகும் இந்த நிலையில் கிழக்குமாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன இந்த நிலையினை கல்வி அமைச்சர் ஆராய்ந்து அதற்கான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 1 ஆம் திகதி புதன் கிழமை கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக இடம் பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் 9 மாகாணங்கள் இருக்கின்றன இதில் கிழக்குமாகாணம் 9 ஆவது நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கான காரணங்களை கண்டறியவேண்டும் கிழக்குமாகாணத்தில் சமத்துவமான ஆசிரியர் நியமனம் வழங்கப்படாமை,பதிலீடு இன்றி இடமாற்றங்கள், அரசியல் தலையீடுகள் போன்ற காரணங்களால் கிழக்குமாகாணத்தின் கல்விநிலை சீரழிக்கப்பட்டு இருக்கின்றது.



கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடந்த பிரதேசமாக இருக்கின்ற அம்பாறை,மட்டக்களப்பு,திருகோணமலைப் பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது இப்பிரதேசங்கள் அதிகஸ்டப்பிரதேசங்களாக இருக்கின்றன இவ்வாறான பிரதேசங்களில் உள்ள வெற்றிடங்களைப் பயன்படுத்தி நியமனங்களைப்பெற்று பின்னர் அரசியல் செல்வாக்கின் மூலம் வசதியான பிரதேசங்களுக்குச் சென்றுவிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். கல்முனையில் 150 வருடம் பழைமைவாய்ந்த பாடசாலையாக இருக்கின்ற உவெஸ்லி உயர்தரப் பாடசாலைக்கு 2020 ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்திக்காக 4.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாக எழுத்துமூல ஆவணங்கள் பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்று இருந்தது. அதன் பிரகாரம் வலயக்கல்வி அலுவலகத்தின் உத்தியோத்தர்கள் அங்கு வருகைதந்து அவ் வேலைகளை ஆரம்பிப்பதற்காக அங்கிருந்த பழைய கட்டிடம் ஒன்று அகற்றப்பட்டு இருந்தது. ஆனால் கட்டிடம் அகற்றப்பட்டும் வேலை இடம்பெறவில்லை ஆகவே இப்பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி எங்கு சென்றது என்று தெரியாமல் உள்ளது இந்த நிலை தமிழ்ப் பாடசாலைகளுக்குத்தான இடம்பெறுகின்றது இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் ஆராய்ந்து இந்நிதிக்கு என்ன நடந்தது என்பதனைக் கண்டறிய வேண்டும் என்பதனை உயரிய சபையில் தெரிவிக்கின்றேன்.

சம்மாந்துறை கல்வி வலயத்தில் நாவிதன்வெளிக் கோட்டக்கல்வி அலுவலகம் அமைப்பதற்காக அத்திவாரம் இடப்பட்டவறே இருக்கின்றது. ஏனைய கோட்டங்களான சம்மாந்துறை, இறக்காமக் கோட்டங்களுக்கு நிரந்தரமான கட்டிடம் இருக்கிறது. இதனைப் பார்க்கின்ற போது தமிழ்ப்பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகிறதோ என்ற எண்ணம் தோன்றுகின்றது.

திருக்கோவில் பிரதேசபாடசாலை ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டபோதும் மாணவர்களுக்கான போதிய கட்டிடம் இல்லை அது போன்றுதான் சம்மாந்துறை கல்வி வலயத்தில் றாணமடு இந்து மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட போதும் அதிலும் போதியவளம் இல்லை இவ்வாறுதான் தமிழ்ப்பிரதேசபாடசாலைகளின் நிலை இருந்து கொண்டிருக்கின்றது.

# அமைச்சர் நிமால லான்சாவுடன் உறுப்பினர் ராஜன் சந்திப்பு! தீர்ந்தது கல்முனை தமிழர்பிரதேச மைதானப் பிரச்சினை!

(காரைதீவு வி.ரி.சகாதேவராஜா)

கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிமால் லான்சாவுடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் நடாத்திய சந்திப்பையடுத்து கல்முனைதமிழர்பிரதேசமைதானப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டது.



மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஸ் சகிதம், கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கல்முனை தமிழ்ப்பிரிவிலுள்ள மைதானத்தை கபளீகரம் செய்யும் நோக்கில் மைதானத்திற்கு குறுக்காக கார்ப்பட் வீதியமைக்க முயற்சிசெய்வதையும் அதனால் ஏற்படும் விபரீதங்களையும் உறுப்பினர் ராஜன் அமைச்சரிடம் பூரணமாக விளக்கமளித்தார்.

அதனையடுத்து மைதானத்திற்கு கிழக்கு புறமாக மைதானத்திற்கு எவ்வித பாதிப்புமின்றி குறித்த கார்ப்பட் வீதி அமைக்கப்படும் என்று அமைச்சர் நிமால் லான்சா கூறியதோடு இதுவிடயத்தை உடனடியாக அங்கிருநதவாறே தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் ஏ.எல்.எம்.அலியாருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொதுமக்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் மைதானப்பிரச்சினையும் தீர்த்துவைக்கப்பட்டது.

மைதானப்பிரச்சினை பற்றி தெரிய வருவதாவது:

கல்முனைதொடக்கம் மருதமுனை வரை கடலோரமாக கார்ப்பட்வீதியமைக்கும்போது கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு விளையாட்டுமைதானத்திற்கு குறுக்காக வீதியமையும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான முதல் கட்டவேலைகளும் நடைபெற்றுவருகின்றவேளையில் பொதுமக்களின் எதிர்ப்பலை தொடங்கியிருந்தது.

மைதானத்திற்கு பாதிப்பில்லாதவகையில் மைதானத்திற்கு கிழக்காக வீதியை அமைக்குமாறு பொதுநல அமைப்புகள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், சைனிங் விளையாட்டுக்கழக்கத்தினர் ,பொதுமக்கள் என பலதரப்பினரும் வேண்டுகோள்விடுத்து எதிர்ப்பை பலகூட்டங்களிலும் தெரிவித்திருந்தனர். இறுதியாக வீதிஅபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் கடந்த வாரம் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ,சைனிங் விளையாட்டுக்கழகத்தினர்பொதுமக்களெல்லாம் சேர்ந்து மைதானத்தில் ஒரு சந்திப்பை நடாத்தியிருந்தனர்.

அங்கு மக்கள் 'மைதானத்திற்கு குறுக்காக வீதி என்றால் எமக்கு வீதி தேவையில்லை. மைதானத்தை தவிர்த்து போடுவதானால்போடுங்கள். என்று தமது குரலை எழுப்பினர்.

எனினும் வீ.அ.அ.சபையினர் தமது பிடியில் விடாப்பிடியாக இருந்தகாரணத்தினால் அந்தப்பகுதியில் மாத்திரம் தற்சமயம் வீதியமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டடிருந்தது.

கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் இதுவிடயம் பற்றிக்கூறுகையில்:

கல்முனை 1ஆம் 2ஆம் 3ஆம் பிரிவுகளுக்கான ஒரேயொரு விளையாட்டுமைதானம் இது. சுனாமிக்கு முன்னர் கல்முனை மாமாங்க வித்தியாலயமும் அதன் மைதானமும் அமைந்திருந்த பிரதேசம் இது.கடற்கரையருகே அமைந்திருந்த காரணத்தினால் சுனாமியினால் பாடசாலை முற்றாக சேதமடைந்து பிறிதொரு இடத்தில் அமைக்கப்பட்டு பாடசாலை இயங்கிவருகிறது. பாதிக்கப்பட்ட மைதானத்தை, சைனிங் விளையாட்டுக்கழகத்தினர் பொறுப்பெடுத்து புனரமைத்து இன்று இளைஞர்கள் பொழுதுபோக்கிற்கு விளையாடும் களமாகவுள்ளது.இதனை வீதிக்காக விட்டுக்கொடுக்கமுடியாது.இளைஞர்கள் விளையாடாமல் போதைவஸ்துவிற்கு அடிமையாகிமுழுச்சமுகமும் குட்டிச்சுவராகவேண்டும் என்று எண்ணுகிறார்கள் போல. அதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

இன்றைய இளைஞர்களினதும் நாளையசந்ததியினரினதும் பழிச்சொல்லை இவ்வட்டாரப்பிரதிநிதி என்றவகையில் நான் சுமக்கவேண்டிவரும்.வீதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை இருக்கின்ற ஒரேயொரு மைதானத்தை ஒருபோதும் இழக்கமுடியாது.அதற்காகவே கொழும்பு சென்று அமைச்சர் நிமால் லான்சாவுடன் மாத்தளைமேயருடாக சந்திப்பை ஏற்படுத்தி வெற்றிகாணப்பட்டது.என்றார்.

# யானைகளின் அட்டகாசத்தால் தோட்டப் பயிர்கள் சேதம்



(குகதர்சன்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குகநேசபுரம் கிராமத்தில் இன்று அதிகாலை வேளையில் புகுந்த யானைகளின் அட்டகாசத்தால் தோட்டப் பயிர்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குகநேசபுரம் கிராமத்தில் வாழும் மக்கள் தங்களது காணியில் பயன்தரும் மரங்கள் மற்றும் மரக்கறி தோட்டங்கள் அமைத்து பராமரித்து வரும் நிலையில் இரவு வேளைகளில் வரும் யானைகள் இவற்றை சேதப்படுத்தி செல்லும் நிலைமை காணப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இன்று அதிகாலை கிராமத்திற்கு வருகை தந்த யானைகள் மரவள்ளி தோட்டம் வீட்டுப் பயிர்கள் மற்றும் வேலிகளை துவசம்சம் செய்து சென்றுள்ளது.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் குகநேசபுரம் பகுதி மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கும், பயிர்களை யானைகள் துவம்சம் செய்யாது எமது பகுதியை சுற்றி யானைகளிடம் இருந்து பாதுகாப்பு பெருவதற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சம்மாந்துறையில் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் சுரகிமு கங்கா வேலைத்திட்டத்தின் அங்குரார்பன நிகழ்வு



(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)

நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் ஜனாதிபதியின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் 'சுரக்கிமு கங்கா ' வேலைத்திட்டம் 'நிலைபேறான சூழலியல் முகாமைத்துவம்' எனும் கருப்பொருளின் கீழ்நாடுபூராகவும் உள்ள 103 ஆறுகளின் ஆற்றுப் படுக்கையை பாதுகாக்கும் இவ்வேலைத் திட்டத்தில் அம்பாரைமாவட்டத்தில் உள்ள கல்லோயா ஆற்றினை பாதுகாக்கும் நோக்குடன் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பன நிகழ்வு சம்மாந்துறை சுருப்போடை சந்தி வளத்தாப்பிட்டி 2 கிராமசேவையாளர் பிரிவில் புதன் கிழமை (2) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.ஹனிபா தலைமையில்ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை பணிப்பாளர் எம். சிவகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் எஸ். உதயராஜன், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம் நௌசாட், சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம் ஆகியோருடன் விஷேட அதிதிகளாக சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர்எம்.எஸ்.எம். நவாஸ், ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கினைப்பாளர் எம்.ஏ அஸ்ரப் , சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்ஏ.கே பாத்திமா சாமிலா ,ஏ.ஆர் சாஜிதா உட்பட மத்திய சுற்றால் அதிகார சபை உத்தியோகத்தர்கள், நீர்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள்,பொலிஸ்உத்தியோகத்தகர்கள் ,ஆற்று மண் அகழ்வு சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சூழலியல் முகாமைத்துவத்தை மேம்படுத்தி இயற்கை வழங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இவ் வேலைத்திட்டமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக ஆறு மற்றும் ஆற்றுப் படுக்கைகளைப் பாதுகாப்பதற்கான வேலைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக ஆற்றுப் படுக்கைகளில் மண் அகழ்வு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் ஆற்றுப் படுக்கை ஓரங்களில் மரங்களை நடுவதன் ஊடாக ஆற்று வளங்களையும் மண்அரிப்பையும் பாதுகாக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் கவனயீர்ப்பு போராட்டம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஊடகவியலாளர்களின் தாக்குதலை கண்டித்து கிண்ணியாவில் கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த கவனயீர்ப்பானது திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள பஸ் தரிப்பிட முன்றலில் இடம் பெற்றது .ஊடகத்தில் கை வைக்காதே ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டிக்கிறோம் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு இக்கவனயீர்ப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்




சங்கம் மற்றும் கங்கதலாவ ஐக்கிய ஊடக ஒன்றியம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

கிண்ணியாவில் அண்மையில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான போது கிண்ணியா தளவைத்தியசாலையின் முன் அமைதியின்மை ஏற்பட்டது இதனை செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக கண்டித்தே இப் போராட்டம் இடம் பெற்றது. வடக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலும் இப் போராட்டத்தின் போது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு

(துறைநீலாவணை நிருபர் செல்லையா பேரின்பராசா)

பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் பணியாற்றும் திருமதி. சுமதி ரவி 07.12.2021ஆந் திகதி தனது 60ஆவது வயதில் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

05.03.1990 இல் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் இவை தவிர பட்டிருப்பு கல்வி வலயத்தில் முதன்மை உளவளத் துணையாளராகவும் பணியாற்றியவர்



பெரியகல்லாறு புனித அருளானந்தர் வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்த இவர் பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயம், துறைநீலாவணை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) என்பவற்றில் பணியாற்றியுள்ளார். காலஞ்சென்ற அதிபர் குழந்தைவேல் புஸ்பவதி (மலர்) தம்பதியினரின் கணிஷ்ட புதல்வியான இவர் டாக்டர் ரவியின் துணைவியார் ஆவார்.



# பலவீனமான தலைமை தமிழரசுக் கட்சியை எங்கே கொண்டு போகிறது?

**சீலன்**

இன்னும் சில மாதங்களில் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்ற மாகாணசபைத் தேர்தலை மையப்படுத்தி திரைமறைவில் நிறையக் காய்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ராஜதந்திரம் என்ற மூலாம் பூசப்பட்டு, குழி பறிப்புக்கள் , கால் வாருதல்கள் என்று பல நகர்வுகள் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாணசபைகளை குறி வைத்து தமிழ் கட்சிகள் ஒவ்வொரு வழியாகச் சிந்தித்துக்கொண்டிருக்க, ராஜபக்சக்கள் வகுத்து வருகின்ற வியூகங்கள் அங்கு வெற்றி பெற்றுவிடுமோ என்று அஞ்சத் தோன்றுகின்றது.

வடக்கு கிழக்கு மாகானசபைகளை இப்படித் தான் குறிவைக்கின்றார்கள் ராஜபக்சாக்கள்:

கிழக்கு மாகாணசபையை எப்படியாவது கைப் பற்றிவிடவேண்டும்.

வடக்கு மாகாணசபையை எந்தக் கட்சி அமைத்தாலும் அது தம்முடைய ஆதரவின் பெயரிலேயே அமைக்கவைக்கவேண்டும்.

இதுதான் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் ராஜபக்சேக்களின் வியூகம்.

ராஜபக்சக்களது வியூகங்களின் அத்தனை பரிமானங்களை நன்குணர்ந்தும் அதனைத் தடுத்து நிறுத்தவோ மாற்று வியூகம் வகுக்கவோ திராணியற்று தமிழரசுக் கட்சியின் தலைமை தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் கைமீறிப்போவதை அவதாணிக்க முடிகின்றது.

கிழக்கைப் பொறுத்தவரையில் ராஜபக்சேக்களின் வியூகம் என்பது, வெற்றியின் பாதையிலேயே நகர்ந்துகொண்டிருக்கின்றது என்றுதான் கூறவேண்டி இருக்கின்றது.

கிழக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்கள் கிட்டத்தட்ட சம வீதத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

ஏற்கனவே தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த முதலமைச்சர்கள் கிழக்கில் தலா ஒவ்வொரு தடவைகள் பதவிவகித்த நிலையில், அடுத்த முதலமைச்சர் பதவி ஒரு சிங்களவரையே வந்தடையவேண்டும் என்பது பிள்ளையான், வியாழேந்திரன் போன்ற தலைமைகளிடம் ராஜபக்சேக்கள் முன்வைக்கின்ற தார்மீகம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில் கிழக்கில் மகிந்த ஆதரவு சக்திகள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது, அவர்களின் இலக்கு அதிக தூரத்தில் இருக்காது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

த.தே மக்கள் முன்னணியானாலும் சரி, விக்னேஸ்வரன் தலைமையிலான அணியானாலும் சரி இவை இரண்டுமே வடக்கு மாகாணம் சார்ந்த கட்சிகளாகவே முடங்கிவிட்டுள்ளன. கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து தமிழ் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்துவதைத் தவிர வேறு எதுவும் இந்த இரண்டு கட்சிகளாலும் அங்கு செய்துவிடமுடியாது.

கிழக்கில் தமிழர் தரப்பு ஒரு முதலமைச்சர் பதவியைப் பெறுவதானால், அது தமிழரசுக் கட்சியினால் மாத்திரமே சாத்தியமாகும்.

ஆனால் அதற்கு தமிழரசுக் கட்சி எடுத்துவருகின்ற முயற்சி என்ன என்று பார்த்தால் பூச்சியம் என்றுதான் கூறவேண்டி உள்ளது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், கிழக்கு மாகாணசபைக்கு கிழக்கில் இருந்து களமிறக்கப்படக்கூடிய தலைவர் என்று யாரையும் அடையாளம் காட்டமுடியாத ஒரு வங்குரோத்து நிலையிலேயே தமிழரசுக் கட்சி நின்றுகொண்டிருக்கின்றது.

வடமாகாணத்திற்கான முதலமைச்சர் வேட்பாளர்கள் என்று பலரை பட்டியலிட்டு வருகின்ற தமிழரசுக்கட்சி, கிழக்கு மாகானத்திற்கான முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரைக்கூட இதுவரை அடையாளப்படுத்தவில்லை.

தற்போதைய தமிழரசுக் கட்சி தலைமையின் ஆளுமைக் குறைபாடு காரணமாகவே கிழக்கிற்கான ஒரு முதன்மை வேட்பாளரை அந்தக்கட்சி இதுவரை முன்னிலைப்படுத்தவில்லை என்று தெரிவிக்கின்றார்கள் அக்கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள்.

முன்நிலைப்படுத்தாதது மாத்திரமல்ல கிழக்கில் யாரையும் இதுவரை அந்தக் கட்சி தயார்படுத்தவும் இல்லை. வளர்க்கவும் இல்லை.

கடந்த நாடாளுமன்ற வேட்பாளர் தெரிவின் போது கொழும்பில் இருந்து கிழக்கிற்கு அவசர அவசரமாக சில இறக்குமதிகளைச் செய்து, பிரதேசவதம் பேசும் சக்திகளுக்கு வலுச்சேர்த்தது போன்று, இம்முறையும் ஒரு கூத்தை அங்கு அரங்கேற்றி ராஜபக்சேக்கள் கிழக்கை ஆட்கொள்வதற்கான அத்தனை ஒத்தாசைகளையும் தமிழரசுக்கட்சியின் தலைமை வழங்கி முடிப்பார்கள் என்று கூறுகின்றார்கள் அக்கட்சியின் கிழக்கு முக்கியஸ்தர்கள்.

தமிழரசுக்கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா வடமாகான முதன்மை வேட்பாளராக களமிறங்க கொம்புசீவி விடப்பட்டுள்ளார்.

உலகின் மிகப் பெரிய ‘விவசாயி’ சுமோ அந்தக் காரியத்தை கச்சிதமாகச் செய்துகொண்டிருக்கின்றார்.

‘நீங்கள்தான் வடமாகாணத்தை ஆழத் தகுதியானவர்’ என்று மாவையை உசுப்பேத்திக்கொண்டு இருக்கின்றார்.

மாவையும் ‘கைப்பிள்ளை’ வடிவேல் பாணியில் ரெடியாகிவிட்டார்.

‘விவசாயி’ சுமோக்கு இதில் பல லாபங்கள். ஒன்று: ‘கப்பில கடா வெட்டுவது’என்று கூறுவார்களே.. மாவை விடயத்தில் அதனையே செய்கிறார் விவசாயிசுமோ.

‘நீங்கள்தான் தமிழ் இனத்தின் தானைத் தலைவர்’, நீங்கள்தான் யாழ் மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர்.’உங்கள் தலைமைப் பதவியைக் காப்பாற்ற நீங்கள் எப்படியாவது வடமாகானசபையின் முதல்வராகி உங்களை நிரூபிக்கவேண்டும்;..’ இப்படி மாவையை உசுப்பேற்றிக்கொண்டே, கிடைக்கின்ற இடைவெளியில் தன்னை சிரேஷ்ட உபதலைவராக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் ‘விவசாயி’ சுமோ.

ஒருவேளை மாவை தோல்வியுற்றால், ‘மக்கள் ஆதரவு இல்லாத தலைமை’ என்று குற்றம் சுமத்தி அந்தப் பதிவியை பெறுவது அவரது கணக்கு.

ஆனால் மாவை ஐயாவுக்கு இந்தப் பின்னம் எதுவுமே தெரியாது. விளங்கவும் மாட்டாது.

செக்கு மாடு போன்று தலையாட்டுவதைத் தவிர வேறு எதுவுமே தெரியாத ஒரு தலைமையை பெற்றிருப்பதுதான் தமிழரசுக் கட்சியின் மிகப் பெரிய சாபக்கேடு.

வடமாகானசபைத் தேர்தலில் தலைமை வேட்பாளராக மாவை ஐயா களமிறங்கி அதிலும் படுதோல்வியைச் சந்தித்து நிரந்தரமாகவே அவர் அரசியலில் இருந்து விலகி ஓடும் அந்தத் தருணத்திற்காக காத்திருக்கும் கழுகுகளாக பலர் இருக்கின்றார்கள் அந்தக் கட்சியில்.

இந்த இழுபறியில் ஒரு விடயம் கச்சிதமாக நடந்து முடிந்துள்ளது.

கிழக்கை முற்றாக மறந்து வடமாகாணசபையில் மாத்திரம் தனது பார்வையை குவிந்துள்ளது தமிழரசுக் கட்சியின் தலைமை.

கிழக்கு கிட்டத்தட்ட முழுமையாகவே மாவையால் கைவிடப்பட்டுவிட்டதாக கிழக்கின் பல தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

சாணக்கியன் என்ற தனிமனிதனின் செயற்பாடுகளினால் மாத்திரமே கிழக்கில் தனது உயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டிருக்கின்றது தமிழரசுக் கட்சி.

வடக்கின் நிலை அதனை விட பரிதாபகரமாக இருக்கின்றது.

வடக்கில் தமிழரசுக் கட்சியின் நிலை குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகிவிட்டுள்ளது.

பெரும்பாண்மையான தமிழ் மக்களின் நம்பிக்கையையும், அபிமானத்தைப் பெற்ற தமிழரசுக் கட்சி இன்று தமிழ் மக்களை நடு ஆற்றில் விட்டுவிடும் ஒரு நிலையை நோக்கி இட்டுச்செல்லப்படுகின்றதோ என்று அச்சப்படுகின்றார்கள் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள்.

எப்படியெப்படியெல்லாமோ நகர்வெடுத்து வரலாற்றில் பலவிதமான சாதனைகளைப் புரிந்த தமிழரசுக் கட்சி இன்று பலவீனமான, பொருத்தமற்ற தலைமை காரணமாக, தமிழரின் தாயகத்தை, தமிழ் தேசத்தை, தமிழ் தேசியத்தை இழக்கும் ஒரு அவலத்திற்கு வந்துவிட்டுள்ளது.

தகுதியற்ற, பதவியாசை பிடித்த, மக்கள் செல்வாக்கு அற்ற ஒரு தலைமை கட்சியை வழிநடாத்தினால், அந்தக் கட்சி எப்படி சிதறிச் சின்னாபின்னமாகும் என்பதற்கு தமிழரசுக் கட்சி ஒரு சிறந்த உதாரணம்.






# கந்தளாயில் மூன்றாவது கோரோனா தடுப்பூசி அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு செலுத்தப்பட்டன

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூன்றாவது கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் புதன்கிழமை (1) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது பைசர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

அத்தோடு தடுப்பூசி செலுத்தாதவர்கள் மற்றும் ஒரு முறை தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கும் இரண்டாவது தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டன.

அதிகமான அறுபது வயதை தாண்டிய முதியவர்கள் ஆர்வத்தோடு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டதை காணக்கூடியதாக இருந்தது .





# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆயுர் வேத பானம் மாணவர்களுக்கும் வழங்கி வைப்பு

(செல்வி வினாயகமூர்த்தி)

கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் ஜனாதிபதியின் தேசிய வேலத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு மத்திய மருந்தகத்தினால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும் ஆயுர்வேத மூலிகைப்பானம் வழங்கும் செயற்பாடு பல்வேறு பட்ட மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.







இந்தவேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கட்டமாக பாரம்பரிய ஆயுர்வேத முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும் ஆயுர்வேத பானமும் கொரோனா நோய் தொற்று தொடர்பான விழிப்புணர்வு செயல்திட்டங்களும் ஆலையடிவேம்பு பிரதேசசெயல பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகள் தோறும் இலவசமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக ஆலையடிவேம்பில் இயங்கும் முன்பள்ளிகளில் ஒன்றான கனகதுர்க்கா முன்பள்ளி பாடசாலையிலும் அண்மையில் இடம்பெற்றது. கொரோனா நோய்த் தொற்று தொடர்பிலும் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கங்கள், ஆரோக்கியமான உணவுகள் தொடர்பிலும் சிறார்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன் இலவசமாக ஆயுர்வேத மூலிகைப்பானமும் வழங்கி வைக்கப்பட்டது. மகளீர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் ஆலையடிவேம்பு ஆயுர்வேத மத்திய மருந்தக சமூக நல வைத்தியர் ஆமிலா ஜாமால்டீன் மற்றும் மகளீர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் காந்திமதி ஜோய் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# தென்னிந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கோண்டுள்ள

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்



தலவாக்கலை பி.கேதீஸ்

தென்னிந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அங்கு இடம்பெற்றுவரும் அடுத்த தலைமுறைக்கான ஜனநாயகம் என்ற தொணிப்பொருளின் %5 ஜனநாயக நாடுகளை சேர்ந்த 35 வயதிற்குட்பட்ட தலைவர்களுகான மாநாடு இடம்பெறுகின்றது .மேலும் இம் மாநாட்டிற்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் விசேட குழுவொன்று பாரத நாட்டிற்கு சென்றுள்ளமை குறிப்பிடதக்கது. இதன்போது இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷவர்தன் அவர்களை இராஜாங் அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்தித்து விரிவாக கலந்துரையாடினார். இச் சந்திப்பின்போது பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரம் , பாரதநாட்டிற்கும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் செரிந்துவாழும் மலையகத்திற்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், மலையகத்திற்கான அபிவிருத்திகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. மேலும் இராஜாங் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாநில வெளிவுறத்தை அமைச்சர் எம். லேகி சந்தித்து கலந்துரையாடினார். மேலும் அங்கு இடம்பெற்ற பல்வேறு கலாச்சார உறவுகளுக்கான நிகழ்வுகளிலும் கலந்துக் கொண்டமை குறிப்பிடதக்கது. இவ்விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன, ரொகான் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# கிண்ணியா எழிலரங்கு மைதானம் 50 இலட்சம் ரூபா செலவில் மேலும் அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண வைபவம்





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யும் நோக்கின் கீழ் கிண்ணியா எழிலரங்கு மைதானமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கிண்ணியா எழிலரங்கு மைதானத்துக்கான அபிவிருத்தி பணியினை மேற்கொள்ளும் அங்குரார்ப்பண வைபவம் புதன்கிழமை மாலை இடம் பெற்றது. திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள அவர்கள் ஊடாக பொதுஜன பெரமுன மூதூர் தொகுதி இணைப்பாளர் எம்.எஸ்.உவைஸ் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இதில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் குறித்த மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது .விளையாட்டுத் துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள இம் மைதான அங்குரார்ப்பண நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், கிண்ணியா நகர சபை உபதவிசாளர் ஐயூப் நளீம் சப்ரீன், கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.எம்.மஹ்தி, நிவாஸ் உட்பட விளையாட்டு கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# உலக எய்ட்ஸ் தினம் கல்முனையில் அனுஸ்டிப்பு!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

உலக எய்ட்ஸ் தினம் கல்முனையில் சிறப்பாக அனுஸ்டிக்கப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வருடா வருடம் மார்கழி மாதம் முதலாம் திகதி உலக எயிட்ஸ்தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்படுகிறது. இந் நிகழ்வானது கல்முனை பிராந்திய சுகாதார சேவை பனிமனை மற்றும் கல்முனை ஆதாரவைத்தியசாலையுடன் இணைந்து கல்முனை ஆதாரவைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் கொவிட் சுகாதார கட்டுப்பாடு விதிமுறைகளுக்கு அமைவான முறையில் நேற்று நடாத்தப்பட்டது.





இவ் ஆண்டின் தொனிப்போருளாக 'சமத்துவமின்மையை முடிவுக்கு கொண்டு வருதல் எயிட்ஸ் இனை தடுத்தல் மற்றும் பிராந்திய ரீதியான தொற்று பரவலை முடிவுக்கு கொண்டு வருதல் என்பதாகும்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வானது கல்முனை வடக்கு ஆதாரவைத்தியசயலையின் வைத்திய அத்தியட்சகர ; வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளிஸ்வரன்; தலைமையில் இடம் பெற்றதோடு; தொடர்ந்து பிராந்திய சுகாதார சேவைபணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் குண.சுகுணன்; இந்நோய் சம்பந்தமாக மக்களுக்கான விழிப்புணர்வுகள் மற்றும் இந் நோயை கடடுப்படுத்துவதற்குரிய வழிமுறைகள் மற்றும் முன்னெடுப்புகள் சம்பந்தமான உரை ஒன்றை வழங்கினாடர்.

இதனைத் தொடர்ந்து பாலியல் தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் விஜேசேகரவின் விழிப்புணர்வு உரையில் இந் நோய் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் மக்கள் தாமாகவே முன் வந்து பரிசோதனைகளும் வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதுடன் இது சம்மந்தப்பட்ட சுகாதகர பணிப்பாளர்களின் பங்களிப்பு பற்றியும் உரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவை பணிமனை மற்றும் கல்முனை வடக்கு ஆதாரவைத்திசாலையின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பங்குபற்றியதோடு இராணுவமுகாமின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

மேலும் , இந் நிகழ்வினை கல்முனை வடக்கு ஆதாரவைத்தியசாலையின் சுகாதார கல்விபபிர்வு பொறுப்பு வைத்திய அதிகார் டாக்டர் சோ.திருமால் தொகுத்து வழங்கியோதோடு இந்நிகழ்வானது பாலியல் தொற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர். டில்ஷானின் நன்றி உரை இடம்பெற்றது.

# அக்கரைப்பற்று செலிங்கோ லைப் கிளையினால் தங்க நாணயம் வழங்கி வைப்பு

(செல்வி வினாயகமூர்த்தி)




இலங்கையில் இயங்கும் ஆயுள்காப்புறுதி நிறுவனமான செலிங்கோ லைப்பின் 14 வது பெமிலி சவாரி சீட்டிழுப்பில் வெற்றியாளராக தெரிவுசெய்யப்பட்ட (எஸ்.விஜயஸ்ரீகாந்தன் தம்பிலுவில்.) செலிங்கோலைவ் வாடிக்கையாளருக்கு (27)ஐம்பதாயிரம் பெறுமதியான (50000) தங்க நாணயம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் செலிங்கோ லைப் இன் பிராந்திய முகாமையாளர் எஸ் வேணுகரன் வெற்றியாளருக்கான தங்க நாணயத்தை வழங்கி வைத்ததுடன் அக்கரைப்பற்று செலிங்கோலைப் கிளைமுகாமையாளர் ஆர் .சுதர்ஷன் மற்றும் செல்வி இ.பதுர்ஷனா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நிந்தவூரில்

(நூருள் ஹுதா உமர், றாஸிக் நபாயிஸ்)

நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை ஆகிய பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸின் ஒழுங்கமைப்பில் நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று (2) நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். லத்திப், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், படை அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



மேலும் இந்நிகழ்வில், வட கீழ் பருவ பெயர்ச்சி மழைக்கு முதல் அனர்த்த முன் ஆயத்த திட்டங்கள் தொடர்பாகவும், வெள்ள நீர் தேங்கும் இடங்களை அகற்றுவது, அனர்த்த தயார்படுத்தலை செய்வது, கிராம மட்டத்தில் அனர்த்த குழுக்களை வலுப்படுத்தல் , முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை விருத்தி செய்தல், வெள்ளம், சூறாவளி அனர்த்தங்கள் ஏற்படும் போது எவ்வாறு நடந்து கொள்ளல் தொடர்பாகவும் மற்றும் நலன்புரி இடங்களின் விஸ்தரிப்பு.

அவசர உதவி பொருட்கள், மூன்று பிரதேசங்களிலும் 24 மணி நேரமும் இயங்கும் அவசர கால கட்டுப்பாட்டு அறை செயற்பாடுகள், வெள்ள அனர்த்த திட்டங்கள், சேமிப்பு உபகரணங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பப்பட்டது.

# ஆசிரியர்களின் இடமாற்றம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தோடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது



(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஆசிரியர் விடுதலை முன்னணி மற்றும் தேசிய ரீதியில் இயங்கும் ஏனைய தொழிற்சங்கங்களும் இணைந்து மத்திய மாகாண கல்விப்பணிப்பாளர் அமரசிறி பியதாஸ அவர்களுடன் விசேட கலந்துரையாலில் (1) ஈடுப்பட்டனர். இதன்போது ஆசிரியர்களின் இடமாற்றம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ் நாதன் ,ஜாதிக்க குரு சேவா ஆசிரியர் தொழிற்சங்கத்தின் செயலாளர் நாலக்க ஆகியோர் கலந்துக்கொண்டனர்.



# வாசிப்பு வாரத்தையோட்டி நூலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் நூல் வழங்கி வைக்கும் நடவடிக்கை!

(பைஷல் இஸ்மாயில்)

வாசிப்பு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை - குச்சவெளி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட நூலகங்களுக்கும், நூலகங்கள் உள்ள பாடசாலைகளுக்கும் நூல்கள் வழங்கி வைப்பதற்காக துறைசார்ந்த அனுபவம் பெற்ற மருத்துவ நிபுணர்களினால் தொகுத்துத்தெடுக்கப்பட்ட ''நோயும் தீர்வும்'' என்ற நூலின் ஒரு தொகுதியை அதன் தொகுப்பாசிரியர் எம்.ஐ.முஹம்மட் பைஷலிடம் தவிசாளர் எம்.முபாறக்



நேற்று (02) பெற்றுக்கொள்வதை படத்தில் படத்தில் காணலாம்.

# மருதமுனை எம்.எம்.ஹஸான் தேசிய மட்டத்திற்கு தேரிவு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனையில் சேர்ந்த கல்வியற் கல்லூரி பயிலுனர் ஆசிரியரும் விளையாட்டு வீரருமான எம்.எம்.எம்.ஹஸான் குண்டு போடுதல் போட்டி நிகழ்ச்சியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு சாதனை புரிந்துள்ளார். தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளத்தின் 33 ஆவது விளையாட்டு விழா தற்போது மாவட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றன.

அம்பாரை மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சியில், குண்டு போடுதல் போட்டி நிகழ்ச்சி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் (30) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி முதலாம் இடத்தினைப் பெற்று



தேசிய மட்டப் போட்டிக்கு தேரிவு செய்யப்பட்டுள்ளனர். இரண்டாமிடத்தை அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், மூன்றாம் இடத்தை அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பெற்றுக் கொண்டனர்.

மருதமுனையை சேர்ந்த விளையாட்டு வீரர் எம்.எம். எம்.ஹஸானுக்கு பிரதேச மக்கள் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

இவர் மருதமுனை அல் -மினன் வீதியில் வசித்து வரும் ஷேகு இஸ்மாயில் மசூர் - அப்துல் கரீம் நபிஷா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், மருதமுனை அல் - ஹம்ரா வித்யாலயாம், ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

முதலாம் இடத்தை பெற்றவர்கள் மாத்திரம் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவிருக்கும் தேசிய போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகரை பிரதேச செயலாளராக எந்திரி ஜீ.அருணன் நியமனம்!

(கல்லடி நிருபர்)

கோறளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேச செயலகத்திற்கான புதிய பிரதேச செயலாளராக பொறியியலாளர் ஜீ.அருணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாகரைப் பிரதேச செயலகத்தில் கடந்த 01.12.2021 ஆந் திகதி புதன்கிழமை இடம் பெற்ற பிரதேச செயலாளருக்கான வரவேற்பினைத் தொடர்ந்து புதிய பிரதேச செயலாளர் தனத பதவியினை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

இதன்போது வாகரை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் புதிய பிரதேச செயலாளரை மலர் மாலைகள் அணிவித்து வரவேற்பளித்ததுடன் தமது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

புதிய பிரதேச செயலாளரை வரவேற்கு முகமாக இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச செயலாளர் தனது கன்னி உரையின்போது ''கடந்தகால யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்









கிய நிலையில் காணப்படும் வாகரைப் பிரதேசத்தினதும், இப்பகுதி மக்களினதும் முன்னேற்றத்திற்காகவும், சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்தும் பொருட்டும் நேர்மையாக தமது கடமையினை மேற்கொள்வேன் எனவும் அதேபோல் இங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்கள் அனைவரும் இப்பிரதேசத்திற்காக தியாக மனப்பான்மையுடன் ஒத்துழைப்பு வழங்கி சேவையாற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்த பிரதேச செயலகத்திற்கு புதிதாக பிரதேச செயலாளராக பதவியேற்றுள்ள இலங்கை நிருவாக சேவை அதிகாரியான இவர் ஏற்கனவே காணி ஆணையாளர் திணைக்களத்தின் உதவிக்காணி ஆணையாளராகவும், பொதுத்திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் உதவி அத்தியட்சராகவும், கிரான், ஆரையம்பதி, பட்டிப்பளை, மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றியுள்ளதுடன், கிழக்கு மாகாண ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகவும் தனது சிறந்த சேவையினை ஆற்றியுள்ளார்.

# தொழிலாளர்களின் பிறந்தநாளை கோண்டாடிய தோட்ட நிர்வாகம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிறேட் வெஸ்டன் லூசா தோட்ட நிர்வாகத்தால் அத்தோட்ட தொழிலாளர்களின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடினர். ஒவ்வொரு மாதமும் பிறந்தநாள் கொண்டாடும் அனைத்து தொழிலாளர்களையும் ஓர் இடத்திற்கு வரவழைத்து தோட்ட நிர்வாகத்தால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

# மார்கழி முதல்நாளே மன்னாரில் 26 கோவிட் தோற்றாளர்கள் பதிவாகியுள்ளது. இதில் 12 மாணவர்களும் அடங்குவர்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் மார்கழி மாதம் முதல் நாளே 26 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவற்றில் தலைமன்னார் பகுதியிலுள்ள ஒரு பாடசாலையில் 12 மாணவர்களும் அடங்குவர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் நாளாந்தம் கொரோனா தொடர்பாக வெளியிடும் தனது அறிக்கையில் 01.12.2021 அன்று மன்னார் மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 26 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 12 பேர் தலைமன்னார் பகுதியிலுள்ள ஒரு பாடசாலை மாணவர்களாவார்.

அதாவது தலைமன்னார் வைத்தியசாலையில் 15 பேரும், மன்னார் பொது வைத்தியசாலையில் 04 பேரும், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேரும், முருங்கன். பேசாலை, நானாட்டான் வைத்தியசாலைகளிலும் மற்றும் நானாட்டான் சுகாதர வைத்திய அதிகாரி பிரிவில் தலா ஒருவருமே இவ் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் (டிசம்பர்) முதல் நாளே 26 தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 2959 கொவிட் தொற்றாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்

இதுவரை 29 நபர்கள் கொவிட் தொற்றாளர்களாக இறந்துள்ளதாகவும் பதிவாகியுள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிராமத்திற்கு ஒரு வீடு நாட்டிற்கு எதிர்காலம்

## காத்தான்குடியில் பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவர் நஸீர் அஹமட்டினால் காசோலைகள் வழங்கிவைப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடணத்திற்கு அமைவாக அரசினால் வீடற்ற வறிய குடும்பங்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்பட்டுவரும் ''கிராமத்திற்கு ஒரு வீடு நாட்டிற்கு எதிர்காலம்'' எனும் தொனிப்பொருளுக்கமைய மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அமைக்கப்படவுள்ள வீடுகளிற்கான முதற்கட்ட கொடுப்பனவிற்கான காசோலையினை வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (02) காத்தான்குடியில் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவருமாகிய நஸீர் அஹமட் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளையும் வழங்கியுள்ளார்.

இதன்போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் அமைத்துக்கொடுக்கப்படவுள்ள 17 வீடுகளின் உரிமையாளர்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான காசோலைகள் உரிமையாளர்களிடம் பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சிரோஸ்ட மாவட்ட முகாமையாளர் கே.ஜெகநாதன் மற்றும் பிரதேச அபிவிருத்திக்குழு தலைவரின் செயலாளர், முன்னால் காத்தான்குடி நகரசபையின் தவிசாளர் உள்ளிட்ட பயனாளிகள் அடங்கலாக குறிப்பிட்டளவிலானோர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் மருத்துவ உதவி கோடுப்பனவு



கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மருத்துவ உதவி கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது.

செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் ஏற்பாட்டில் டைபெற்ற நிகழ்வில்

பிரதேச செயலாளர் ஏந்திரி க.அருணன் கலந்து கொண்டு காசோலையினை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆறுமுகம் சுதாகரன், கணக்காளர் ஜெ .ஜோர்ஜ் ஆனந்தராஜ் , நிருவாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.ஏ.ஜெமில் , சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம் , சமூர்த்தி முகாமையாளராக திருமதி.கலைவாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது 5500 ரூபாய் வீதம் 10 பேருக்கு மற்றும் இரட்டை பிள்ளைகளுக்கான கொடுப்பனவு 7500 ரூபாய் வீதம் 04 பேருக்கும் , கல்வி கொடுப்பனவாக 4200 ரூபாய் வீதம் 03 பிள்ளைகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டதாக செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் தெரிவித்தார்.

# உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மன்னாரில் கருத்தமர்வு

( வாஸ் கூஞ்ஞ)

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று காலை கருத்தரங்கு இடம்பெற்றது. இவ் கருத்தரங்கில் சுகாதார சேவைகள் திட்டமிடல் வைத்திய அதிகாரி டெனி, பாலியல் சிகிச்சை வைத்திய அதிகாரி நி.தயானி, சுகாதார சௌக்கிய பரிசோதகர் அன்பழகன், கல்வி திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் இது சம்பந்தமான திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள்



# க.பொ.த சாதாரண தரத்தில் முதன்மை நிலை பெற்ற வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மாணவன் ஜாவித் அப்தர் கௌரவிப்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் கடந்த 2020 இல் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்று அகில இலங்கை ரீதியாக Top - 10 இற்குள் தெரிவு செய்யப்பட்டு முதன்மை நிலை பெற்ற மாணவன் முகம்மது அன்வர் ஜாவித் அப்தரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (2) இடம் பெற்றது.

திறமைகளையும், சாதனைகளையும் பாராட்டுவோம் எனும் கருப்பொருளில் நடைபெற்ற இந் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

சாதனை நிலை நாட்டிய மாணவனை வாழைச்சேனை ஜூம்ஆப் பள்ளிவாயலுக்கு முன்பாக இருந்து பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு ஊர்வலமாக பாடசாலை பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் டாக்டர் எம்.எஸ்.எஸ்.எம். உமர் மௌலானாவும், ஏனைய அதிதிகளாக, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.ஜே.எப்.றிப்கா, வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம்.பரீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.



